விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 23 வியாழக்கிழமை (06.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 108

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# நல்லெண்ணத்தை வெளிப்படுத்த அரசுக்கு சிறிதுகாலமே இருக்கிறது

## நோர்வேயின் சிறப்புத்தூதுவருடனான சந்திப்பையடுத்து சு.ப.தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)

**அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த இன்னும் சிறிதுகாலம் தான் இருக்கிறது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.**

நோர்வே அரசின் சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் மற்றும் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடினர்.

புலிகளின் சமாதான செயலகத்தில் முற்பகல் 10.40மணியளவில் நடைபெற்ற இச் சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் வழங்கிய செவ்வியின் விபரம் வருமாறு,

*கேள்வி*:- இன்றைய சந்திப்புத் தொடர்பாக?

*பதில்* :-புதிதாக பணியேற்றுள்ள நோர்வேயின் சிறப்புத்தூதுவரையும் இலங்கைக்கான நோர்வேயின் தூதுவரையும் சந்தித்து தற்போதைய நிலைவரம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம்.

நோர்வேயின் சிறப்புத்தூதுவர் பணியினை புதிதாக பொறுப்பேற்றுள்ளதால் இது அறிமுகச் (12 ஆம் பக்கம் பார்க்க)



## பருத்தித்துறையில் கைதான மூவர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்

(துன்னாலை)

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவில் கடந்த இரண்டாம் திகதி சுற்றிவளைப்பின்போது கைதுசெய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த ஐவரில் மூவர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

செல்வராசா கிருஸ்ணராசா (வயது 44), கி. திவாகர் (வயது 18)கி.சுதாகர்(வயது 21), ஆகியோரே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். இதேவேளை கைதுசெய்யப்பட்டவர்களில் செ.கிருஸ்ணராசா உடல் நிலை பாதிக்கப்பட்டு சேலைன் ஏற்றப்பட்ட நிலையிலேயே நீதிமன்றிற்கு கொண்டுவரப்பட்டார்.

அவரின் உடல்நிலையை கவனத்தில் கொண்ட நீதிபதி அவரை சிறைக்காவலரின் உதவியுடன் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை அன்றையதினம் கைதுசெய்யப்பட்ட ஐவரில் தாயார் கலாவதியும் மகள் ரஞ்சினியும் கைதுசெய்யப்பட்ட அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-101)

## மாணவனை அடித்த ஆசிரியர் 3 1/2 இலட்சம் ரூபா நட்டஈடு

### கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவன் ஒருவனை கன்னத்தில் அறைந்த குற்றத்திற்காக பாதிக்கப்பட்ட மாணவனுக்கு 3இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நட்ட ஈடுகொடுக்கவேண்டும் என்று ஆசிரியருக்கு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாணவனைக் கன்னத்தில் அறைந்து காயம் ஏற்படுத்தியதாக 2000 ஆம் ஆண்டு யூலை 19ஆம் நாள் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி ஆசிரியர் லலித் பண்டார தென்னக்கோன் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

சம்பவம் நடந்தபோது 17 வயதுடைய பாடசாலை மாணவன் தேர்வெழுத தாமதமாக வந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ஆசிரியர் மாணவனின் கன்னத்தில் அறைந்துள்ளார். இதனால் மாணவனுக்கு உடல் நலக்குறைபாடு (12 ஆம் பக்கம் பாக்க்க)

## முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு

(கொழும்பு)

முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டார்.

கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ,முப்படைகளின் தளபதிகள் ,பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அரசியல் தலைவர்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு படைத்தரப்பினருக்கே உண்டு. இதனை உணர்ந்து செயற்படுமாறு பாதுகாப்புத் தரப்பினரிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். (ந-4)

## படையினர் எமது சொத்துக்களை பயன்படுத்த அனுமதியோம்

### மாணவர் அமையம் அறிக்கை

தமிழ் மக்களினதும்,மாணவர்களின் எந்தவொரு சொத்தையும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்புப்படைகள் பயன்படுத்த அனுமதியோம் இவ்வாறு யாழ்.மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அமையம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ்மக்களையும் தமிழ் மாணவர்களையும் கொலைசெய்தும்,கைது செய்தும் ,சித்திரவதை செய்தும், தமிழ்மக்களின் பூர்வீக நிலங்களையும் ,கடற்பிரதேசத்தையும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்தும் வைத்துள்ள (12 ஆம் பக்கம் பாக்க்க)




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் முடிவு

# தமிழ் மக்கள் தலைநிமிர்ந்துவாழ வழிசெய்யும்

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் எழுச்சி ஓங்கி உரைக்கப்பட்டிருக்கிறது. எத்தகைய அச்சுறுத்தல்கள் படையினரின் கெடுபிடிகள் இருந்த போதும் தென் தமிழீழ மக்கள் தமிழ்த்தேசியத்தின் மீதான தமது பற்றுறுதியை வெளிப்படுத்தியுள்ளனர்.

மட்டு-அம்பாறை மாவட்டங்களில் இத்தேர்தலில் போட்டியிட்ட தமிழரசுக்கட்சியின் வேட்பாளர்களுக்கு கொலை அச்சுறுத்தலை விடுத்திருந்தது கருணா குழு. இத்தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் வடக்கு-கிழக்கைப் பிரிப்பது பற்றிய கூட்டம் விமல் வீரவன்ஸ தலைமையில் நடைபெற்ற போது அதாவுல்லாவின் அணியினரும் கருணாகுழுவினரும் அதில் பங்கேற்றிருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் தலா ஒன்பது பேர் கொண்ட திருக்கோயில் மற்றும் ஆலையடி வேம்பு பிரதேச சபைகளில் சகல ஆசனங்களையும் வென்று சரித்திரம் படைத்துள்ளது தமிழரசுக்கட்சி விகிதா சாரப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இவ்வாறான இமாலய வெற்றியொன்றைப் பெற்றுள்ளது தமிழரசுக்கட்சி. இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஒரு கட்சி சகல ஆசனங்களையும் கைப்பற்றுவது இனிச் சாத்தியமில்லை என்றே அரசியலமைப்பு விற்பன்னர்கள் தெரிவித்தனர். தமிழ்த்தேசிய எழுச்சிக்கு முன்னர் இந்தகணிப்புகள் உடைந்து நொருங்கின. காரைதீவிலும் மொத்தமாக உள்ள ஐந்து ஆசனங்களில் நான்கினைவென்று ஆட்சியை பொறுப்பேற்றுள்ளது இக்கட்சி.

திருமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேசசபையை ஏற்கெனவே போட்டியின்றிக் கைப்பற்றியது தமிழரசுக்கட்சி. இச்சபைக்கென வேறு எந்தக் கட்சியும் போட்டியிடவில்லை. திருமலை நகரசபையில் உள்ள பன்னிரெண்டு ஆசனங்களில் 10 ஆசனங்களையும் பட்டணமும் சூழலும் பிரதேச சபையில் உள்ள 9 ஆசனங்களில் ஆறு ஆசனங்களையும் வென்று இந்த உள்ளூராட்சிகளைப் பொறுப்பேற்றுள்ளது இக்கட்சி. அத்துடன் கிண்ணியா மொறவேவ, சேருவெல பிரதேசசபைகளில் தலா ஒருஆசனத்தையும், தம்பலகாமத்தில் இரு ஆசனங்களையும், மூதூரில் நான்கு ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

இதன் மூலம் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகளே என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது இந்தத் தேர்தலின் போது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் அரசியல் பணியாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த பொதுத் தேர்தலின் போது விடுதலைப் புலிகள்மோசடிமூலமே வெற்றி பெற்றார்கள் என்ற டக்ளஸ் மற்றும் ஆனந்த சங்கரியின் வாதங்களும் அடிபட்டுப் போயின.

இதில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது வேறு எந்தக் கட்சிகள் சார்பாகவும் தமிழர்கள் தெரிவாகவில்லை என்பதுதான். கவனிக்கப்படவேண்டிய இன்னொரு விடயமாக திருமலை நகர சபை விவகாரம் உள்ளது. திருமலை நகரம் தொடர்பான விடயங்கள் 1958 முதல் இன்றுவரை உணர்ச்சி பூர்வமானதாகவே உள்ளது. அந்த வகையில் இத்தேர்தலில் திருமலை நகரசபையைப் பொறுத்தவரை தான் எடுத்த தீர்மானம் சரியானதுதானா? எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளைச் சந்திக்கும் போது தனது செயலுக்கு எவ்விதத்தில் நியாயம் கற்பிக்கப் போகிறார் முஸ்லிம் காங்கிரஸ்கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம்? என்பன முக்கியமான வினாக்கள்.

இலங்கைத்தீவில் தாங்கள் போட்டியிட்ட சகல உள்ளூராட்சித் தேர்தல்களிலும் எதிரெதிராகப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் திருமலை நகர சபையில் இணைந்தே போட்டியிட்டன. ஜனாதிபதிதேர்தல் பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றிலெல்லாம் ஆட்சியைக்கைப்பற்ற அடிபடும் இக் கட்சிகளை ஓரணியில்திரளவைத்தது எதுஎன ஆராய்ந்தால் அதற்கான விடை தமிழர் எதிர்ப்பு என்பதாகும்.

பாராளுமன்றத்திலும் தமக்குள்ளே என்னதான் சண்டையிட்டாலும் அவசரகாலச்சட்ட நீடிப்பிலோ பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டிலோ இரட்டைக்குழல் துப்பாக்கி போலவே இக்கட்சிகள் செயற்படுவதுண்டு. அந்த வகையில்தான் திருமலை நகரசபையில் தமிழர் எதிர்ப்பு என்ற ஒரு விடயத்தில் தமக்குள் இக்கட்சிகள் ஐக்கியப்பட்டன. இக்கூட்டினுள் இயல்பாகவே தமிழின எதிர்ப்பைக் கக்கும் வட கிழக்கு சிங்கள அமைப்பு அடங்கிய தொன்றும் வியப்பல்ல.

ஆனால் இதேகூட்டினுள் முஸ்லிம் காங்கிரஸ் ஏன் இணைந்தது? நீங்கள் தமிழருக்கு சார்பான வரா சிங்களவருக்கு சார்பானவரா எனக் கேட்டால் இனி ரவூவ் ஹக்கீம் சிங்களவருக்கு சார்பானவரே எனத்தான் பதில் கூறமுடியும். மூன்றாம் தரப்பு என்பதெல்லாம் திருகோணமலை நகரசபை எல்லைக்குள் நின்று சொல்ல முடியாது. உள்ளூராட்சித் தேர்தலுக்குப்பிறகு தனது தனித்தரப்பு கோரிக்கையை வலியுறுத்தும் தார்மீக உரிமையை இழந்துவிட்டார் ரவூவ்ஹக்கீம். ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நால்வரும் ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி (சுதந்திரக் கட்சி) சார்பில் ஐவரும் வடக்கு- கிழக்கு சிங்கள அமைப்புசார்பில் ஐவரும் கொண்ட அதே பட்டிய லில் தான் முஸ்லிம் காங்கிரசின் இருவேட்பாளர்களும் அடங்கியிருந்தனர் இவ்வாறாக தமிழினத்துக்கு எதிராகச் செயற்பட்டும் முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்கள் எவரும் வெற்றிபெறவில்லை என்பது தான் அவருக்குக் கிடைத்த செருப்படி.

தமிழரசுக்கட்சி சார்பிலும், ஐக்கியதேசியக்கட்சி சார்பிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பிலும் தலா ஒரு முஸ்லிம்கள் தெரிவாகியுள்ளனர். ஆனால் முஸ் லிம் காங்கிரஸ் சார்பான வேட்பாளர் வெற்றிபெறவில்லை. ஒரு விதத்தில் திருமலை நகரசபையில் ஒரு சிங்களவரும் வெற்றிபெற வில்லை என்பது தமிழர்களுக்கு இரட்டிப்பு வெற்றியே.

இன்னொருவிடயம் தமிழரசுக்கட்சியிலிருந்து வெளி யேற்றப்பட்ட வ.நவரத்தினம் தமிழர் சுயாட்சிக் கழகத்தினை ஆரம்பித்து 1970ஆம்ஆண்டுமற்றும்1977ஆம் தேர்தலில் போட்டியிட்டார். அச்சமயத்தில் திருமலையில் தனது கட்சி போட்டியிடாது என்று அழுத்தம்திருத்தமாகக் கூறினார் வ.நவரத்தி னம். தமிழர் வாக்குகளைப் பிரிப்பதற்குதான் தயாரில்லை என்றும் தனது கட்சி அங்கு போட்டியிட்டால் இனவாதிகளுக்கே அது சார்பாக முடியும் என்றும் பதிலளித் தார் அவர். ஆனால் சிங்களவர்கள் அலை வரும் தமிழின எதிர்ப்பு என்ற குடையின் கீழ் ஒன்றிணைந்து இவர்களுடன்'ரவூவ் ஹக்கீம் போட்டியிடுகின்றார் எனத் தெரிந்தும் தமிழரின் வாக்குகளை பிரிக்கும் தனது முயற்சியை டக்ளஸ் தேவானந்தா கைவிடவில்லை. ஆயினும் வெறும் 259 வாக்குகளை மட்டுமே இவரால் பிரிக்க முடிந்தது.

மலையகத்திலும் நிலைமைகள் மாறுகின்றன. இதற்கு உதாரணம் நுவரெலியா மாநகரசபை தேர்தல் முடிவு இ.தொ.க.மலையக மக்கள் முன்னணி ஆதரித்தும் கூட ஐ.ம.சு.மு இரண்டு ஆசனத்தையே கைப்பற்றியுள்ளது. அந்த இருவரும்கூட சிங்களவரே தொண்

### இணையப் பார்வை

டமானினதோ சந்திர சேகரனினதோ வேண்டுகோளுக்காக மலையக மக்கள் வாக்களித்திருந்தால் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நிச்சயம் இவ்விரு ஆசனங்களும் தமிழர்களே தெரிவாகியிருப்பர். தமது நிலைப்பாடு என்ன என்பதை மலையகத் தமிழர்கள் இவ்விரு கட்சிகளுக்கும் எடுத்துக் கூறவிட்டனர்.

அந்தச் செய்தியின் ஆழத்தை சம்பந்தப்பட்டவர்கள் உணரும் போது இலங்கைத் தீவில் தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான வழிவகைகள் பிறக்கும்.

## இராசி பலன்

**06.04.2006**

**(பங்குனி 23, வியாழக்கிழமை)**

**அட்டமி முற்பகல் 10.21 மணிவரை**

**புனர்பூசம் முன்னிரவு 7.57 மணிவரை**

**இராகுகாலம் 1.38-3.08மணிவரை**

**சுபநேரம் 07.38-09.08 மணிவரை**

**சிறிராம நவமி**

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், மனச்சஞ்சலம், ஆரோக்கியக் குறைவு, காரியதாமதம். |
| இடபம் | நற்கீர்த்தி, இஷ்டசித்தி, சௌக்கியம், பிரயாண நன்மை. |
| மிதுனம் | மனோ சங்கடம், காரிய இடையூறு, பொருள்விரயம், திடீர்நன்மை. |
| கடகம் | மாதர்நட்பு, சயனசுகம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | சோம்பல் நிலை, அமைதிக்குறைவு, பிரயாணம், எதிர்பாராத நன்மை. |
| கன்னி | ஆரோக்கியம், தனதானிய சேர்க்கை, வாக்குவன்மை, தொழில்நன்மை. |
| துலாம் | பிரபுத்தனம், நன்கொடை, தொழில் விருத்தி, காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | சரீரப் பிரயாசை, எதிர்பார்த்த செலவு, கட்டுப்பாடு, பிரயாணம். |
| தனுசு | முழங்கால் வலி, பொருள்விரயம், மரியாதைக்குறைவு, எதிர்பாராத நன்மை. |
| மகரம் | எடுத்தகாரியம், கைகூடும், தேகநலன், சுபநிகழ்வு, போசனசுகம். |
| கும்பம் | மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம்கைகூடும், ஆரோக்கியம், சத்துரு ஜெயம். |
| மீனம் | பணக்குறைவு, அஜீரணக் கோளாறு, மனக்கவலை, கௌரவக்குறைவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

## தரமான சுகாதார சேவைகளை வழங்க தடையாகவிருக்கும் தொழிற்சங்கங்கள்!

**சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா**

தரமான சுகாதார சேவைகளின் பலாபலன் களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் சில தொழிற் சங்கங்களின் செயற்பாடுகள் தடையாகவுள்ளன என்றும் இந்தச் சங்கங்களின் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்காக மாற்று வழிகளை நடைமுறைப் படுத்த விருப்பதாகவும் சுகாதார அமைச்சர் நிமால் சிறி பாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னர் சில தலைவர்கள் வேலை நிறுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட முறைகளைப் பயன்படுத்தியதாகக் கூறும் அமைச்சர்,

ஜனநாயக ரீதியில், புதிய அர சாங்கம் வேலை நிறுத்த சவால்களுக்கு மாற்றுத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் கூறினார். இதில் ஒரு நடவடிக்கையாக சுகாதார சேவையில் காணப்படும் வெற்றிடங்களை இந்த வருட இறுதிக்குள்பூர்த்திசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (க-7)

## விளையாட்டு விழா

தென்னிந்திய திருச்சபையின் அனுசரணையுடன் நடைபெறும் முத்தமிழ் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நிலையத்தலைவர் வி.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அராலி மேற்கு கிராம சேவையாளர் எஸ்.பவானந்தனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.அராலி வள்ளியம்மை மெமோறியல் வைத்தியசாலை அதிபர் கே.ஹரிகர சக்தியும், யாழ்.முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் திருமதி தர்மராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சித்தன்கேணி வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் எஸ்.இராசலிங்கம், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் எஸ்.குமாரசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-49)

## வினைத்திறமை காண் தடைப்பரீட்சை மே மாதம் கொழும்பில் ஆரம்பமாகும்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத் தர்கள் தமது விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஒருவார காலத்திற்கு முன்னர் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இந்தப் பரீட்சையில் உத்தியோகத்தர்கள் சித்தியடைவதை அடிப்படையாகக் கொண்டு கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகள் மற்றும் சம்பள அதிகரிப்புகள் என்பன மேற்கொள்ளப்படும்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் வலயக்கல்வி அலுவலகங்கள் மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்கள் என்பவற்றில் காணப்படும் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங் களை நிரப்புவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்தின ஹேவகே தெரிவித்துள்ளார். (க-9)

**வீதியில் செல்வோருக்கு**

## தொல்லை கொடுத்த நபர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த நபர்களுடன் தகராறு செய்த நபர் இருவரை கைதுசெய்த பொலிஸார் யாழ்.மாவட்ட நீதிபதி இ. த. விக்னராசா முன் ஆஜர்படுத்திய போது அவர்கள் இருவரையும் தண்டப்பணமாக தலா ஆயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை யாழ்.பிரதான வீதியில் இடம்பெற்றது. இந் நபர்கள் இருவரும் மதுபோதையில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-132,133)

# த.பு.கழக பணியாளர்களின் விடுதலை குறித்து அரசு அக்கறை காட்டவில்லை

## உறவினர்கள் கவலை

(கிளிநொச்சி)

துணைக்குழுவினரால் கடத்தப்பட்ட தமது உறவினர்களின் விடுதலை தொடர்பாக அரசு இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில்,

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் பணியாற்றி வந்த எமது உறவினர்கள் இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டனர்.

இவர்கள் தொடர்பாக இதுவரை எங்களுக்கு எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இவர்கள் கைதுசெய்யப்பட்ட மறுநாளே நாங்கள் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, பொலிஸார், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என சகல இடங்களிலும் முறைப்பாடுகளை செய்தோம்.

ஆனால் அவர்கள் இதுவரைக்கும் எந்த பதிலையும் தருவதாக இல்லை. இவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கை ஜனாதிபதி வரையும் கடிதங்களை அனுப்பியும் அங்கிருந்து எதுவித பதில்களும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர். (க)

# சமாதானத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் உதவுமாம்!

## மங்கள, யாப்பா கூட்டாக அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இறைமையைப் பாதுகாத்து பிளவுபடாத இலங்கைக்குள் சமாதானத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் முழு அளவில் உதவ முன்வந்துள்ளது.

இரு நாடுகளினதும் இறைமைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் பயங்கரவாதத்தை ஒழிக்க பரஸ்பரம் உதவுவதற்கும் பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது என்று அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரின் பாகிஸ்தான் விஜயம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது அமைச்சர்கள் இவ்வாறு கூறினர். (க)

# படுக்கையில் கிடத்திய புகை

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் சன நெருக்கமான இடத்தில் வசிக்கும் 20 வயது இளைஞன் ஒருவன் கடந்த 2 மாத காலமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறான்.

அவனால் எழுந்து நடக்கமுடியாது. படுத்த படுக்கையிலேதான் காலம் கழிகிறது.

காரணம் இதுதான். அவன் சிறு வயதிலிருந்தே புகைத்தலுக்கு அடிமையானவன். சிகரட்டும் பிளேன் ரீயும் தான் அவனது மூன்று வேளை உணவாம்.

நாளொன்றுக்கு 20 சிகரட்டுக்களுக்கு மேல் அவனுக்குத் தேவைப்படுகிறதாம். அதனாலே தான் இந்த நரக வேதனை.

அவனது உடலின் உட்பாகங்களில் பெரும்பாலானவை பழுதடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவன் எழுந்து நடப்பதனால் எத்தனையோ வருடங்களாகுமாம். சிலவேளைகளில் அதுவும் சாத்திய மற்றுப்போய்விடுமாம். அவன் கண்கள் இரண்டும் உள்ளே போய் விகாரமாகக் காட்சியளிக்கிறதாம். (து)








இலங்கையிலே முதல்தரமான தனியார் உள்ளூர் விமான சேவையான எக்ஸ்போ எயார் தனது சேவையினை உலகளாவிய ரீதியில் விரிவுபடுத்தவுள்ளது என நேற்றுமுன்தினம் யாழ். எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் கலந்துரையாடலில் விற்பனை மற்றும் சந்தைப் படுத்தல் பயணிகள் சேவை இயக்குநர் செறாஜ்முகமட் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் எக்ஸ்போ எயார் யாழ்.பிராந்திய முகாமையாளர் கே.வசிகரன் மற்றும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:எஸ்.ரி.ராஜா , ரி.திலீவின்பன்)

# நிரந்தர வைத்தியர் நியமனம்

(நல்லூர்)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் மாலை நேரங்களில் பணியாற்ற நிரந்தர வைத்தியர் இல்லாதபடியால் அவ்வைத்தியசாலைக்கு முழுநேர நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (து-134)

# கட்டடங்கள் திறப்பு

(சாவகச்சேரி)

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கட்டடங்கள் இன்று காலை 9.30 மணிக்குதிறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.கதிர்காமசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவன யாழ்.பணிப்பாளர் றுடொல்ப் பன்கசர் பிரத விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடங்களை திறந்துவைப்பார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (க-29)

# கலந்துரையாடல்

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப 1 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் அதில் சகல அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க-7,9)

# பங்குனித்திங்கள் உற்சவம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி மறவன்புலோவில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இரு அம்மன் ஆலயங்களில் பங்குனித் திங்கள் உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அங்கு பெரும் எண்ணிக்கையில் மக்கள் சென்று வழிபாடு செய்து வருகின்றனர் என கூறப்படுகின்றது. இவ் ஆலயங்களில் கடந்த 4 வருடங்களாக எதுவித வழிபாடுகளும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க.37)

# சட்டவிரோதமாக மதுவிற்றவருக்கு 15 000 ரூபா அபராதம் விதிப்பு

கொக்குவில் ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வீட்டில் வைத்து சட்டவிரோதமாக சாராயம் மற்றும் பியர் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த திங்கட்கிழமை கோப்பாய் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவரை விசாரணை செய்த நீதிவான் தண்டப்பணமாக 10 ஆயிரம் ரூபாவும் தர்மப்பணமாக 5ஆயிரம் ரூபாவும் செலுத்தும்படி உத்தரவிட்டார். (க-132,133)

# தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பறவைகளுக்கு நோய்களால் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் உடன் கால்நடைத் திணைக்களத்துடன் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 021 222 2342, 060 222 3563. (து-134)












ஐ.சி.ஆர்.சி நிறுவனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்திற்குக் கடந்த மாதம் வருகை தந்திருந்த ஐறின் தலைமையில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடு இடம்பெற்றது.

இம்மாநாட்டில் கென்யா நாட்டைச் சேர்ந்த யாழ்.பிராந்திய ஐ.சி.ஆர்.சி பாதுகாப்பு அதிகாரி கே.மஜித், பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த யாழ். ஐ.சி.ஆர்.சி பாதுகாப்பு பேராளர் இன்ஸ்கே மற்றும் ஐ.சி. ஆர்.சி நிறுவனத்தின் தகவல் தொடர்பு அதிகாரி சுகுமார் றொக்வூட், தொடர்பாடல் அதிகாரி சில்வஸ்ரர் ஆகியோர் கலந்துகொண்டு ஐ.சி.ஆர்.சியின் செயற்பாடு தொடர்பான கருத்துக்களை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்:எஸ்.ரி.ராஜா , ரி.திலீவின்பன்)

# டுபாயில் வேலையை இழந்து தவித்த 28 இலங்கையரும் நாடு திரும்பினர்

(கொழும்பு)

டுபாயில் அநாதரவான நிலையிலிருந்த 28 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

டுபாயில் ஆடைத் தொழிற்சாலையொன்றில் கடமையாற்றிய இவர்கள் இந்த ஆடைத் தொழிற்சாலை திடீரென மூடப்பட்டதினால் கடந்த 6 மாதகாலமாக அங்குள்ள இலங்கை தூதரகத்தில் தங்கியிருந்தனர்.

இதேவேளை குறித்த தொழிற்சாலையின் உரிமையாளர்களிடமிருந்து நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஈடுபட்டுள்ளது. (க-9)

# கோட்டபாய ராஜபக்சவின் இந்தியப் பயணம் இரத்து?

இந்தியாவுக்கு இன்று வியாழக்கிழமை பயணம் மேற்கொள்ளும் இலங்கைக் குழுவில் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோட்டபாய ராஜபக்ச இடம்பெறவில்லை என்று கூறப்படுகிறது.

மஹிந்தவின் பாகிஸ்தான் பயணத்தைத் தொடர்ந்து இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு குழுவை அனுப்ப இலங்கை முடிவு செய்திருந்தது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜி.எஸ். பாலிஹக்கார தலைமையிலான இக்குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்பாய ராஜபக்ச இடம்பெற்றிருந்தார். ஆனால் தற்போது கோட்டபாய ர்ாஜபக்ச இந்தியப் பயணம் மேற்கொள்ள மாட்டார் என்று கூறப்படுகிறது. (க)

## இன்று ஒரு தகவல்

# கண்ணாடி தேவை இல்லை

ஒரு நண்பரைத் தேடிக்கொண்டு போனேன். அவரை பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டது. அதனால் பார்த்துப் பேசிவிட்டு வரலாம் என்று நினைத்துக்கொண்டு போனேன. நான் போகும் போது அவர் வீட்டு வாசலில் தான் நின்று கொண்டிருந்தார். தூரத்திலேயே நான் அவரைப் பார்த்து விட்டேன். இரண்டு கைகளையும் தூக்கி வணக்கம் என்று சொல்லிக்கொண்டே நெருங்கினேன். அவர் அதைக் கண்டு கொள்ளவே இல்லை. அவர் பாட்டுக்கு நின்றுகொண்டிருந் தார். நான் அருகில் நெருங்கியதும் உற்றுப்பார்த்து விட்டு "அடடா... நீங்களா... மன்னிக்கவேண்டும் எட்டத் தில் வரும்போது உங்கள் முகம் எனக்குச் சரியாகத் தெரிய வில்லை" என்றார்.

இந்த அனுபவம் பலபேருக்கு ஏற்பட்டிருக்கலாம். இதற்கு என்ன காரணம்? மையோப்பியா. அதாவது கிட் டப் பார்வைக் கோளாறு. கிட்டப் பார்வைக் கோளாறு என்றால் அருகில் உள்ளது நன்றாகத் தெரியும். தூரத் தில் உள்ளது நன்றாகத் தெரியாது. ஒரு பொம்மை யைப் பார்க்கிறோம். அதிலிருந்து வரும் ஒளிக் கதிர்கள் நமது கண்கள் வழியாக உள்ளே செல்கிறது. கண் ணுக்கு மேலே முன்புறமுள்ளது விழிவெண்படலம். அதன் வழியாக உள்ளே போய் அங்கே உள்ள திரையில் விழு கிறது. அந்தத் திரைக்குப் பெயர்தான் ரெட்டினா (**Retina**) விழித்திரை.

பிம்பம் திரையில் சரியாக விழுந்தால் பார்வை நன் றாக இருக்கிறது என்று அர்த்தம். நாம் பார்ப்பதெல்லாம் பளிச்சென்று தெரியும். கிட்டப் பார்வைக்கோளாறு உள் ளவர்களுக்கு இந்தப் பிம்பம் திரையில் விழுவதற்குப் பதிலாக அதற்குக் கொஞ்சம் முன்னாலேயே விழுந்து விடும். அதனால் பார்க்கும் பொருள் தெளிவாகத் தெரி யாது. இதைச் சரிசெய்வதற்கு இதுவரை என்ன செய்து கொள்வோம். கண்ணாடி அணிவோம்... அல்லது லென்ஸ் பொருத்துவோம். அதாவது ஒட்டுக்கண்ணாடி வில்லை.

இப்போது கண்ணாடி தேவையில்லாமலேயே பார்வை யைச் சரிசெய்ய ஒரு வசதி வந்திருக்கிறது. அதுதான்... எக்ஸைமர் லேசர். விழிவெண்படல ஒளிக்கதிர் சிதறல் அறுவைசிகிச்சை. இது எப்படியென்றால் விழிவெண் படலத்தில் நடுப் பகுதியில் மேலெழுந்தவாரியான 10 முதல் 20 சதவீதம் வரை தடிமனை நீக்கிவிடுகிறது.

இன்னொரு முறை எப்படியென்றால் அது விழிவெண் படல ஆர அறுவை சிகிச்சை! விழிவெண்படலத்தின் தடி மனான மேற்பகுதியை 99 சதவீதம் வரை... 4 முதல் 8 ஆரங் களாக வெட்டி செதுக்கி நடுப்பகுதியை சமப்படுத்தும் அறுவை சிகிச்சை இது. ஒளிக்கதிர் சிதறல் அறுவை சிகிச்சை பதினைந்து நிமிடங்களில் முடிந்துவிடும். மருத் துவமனையில் நாம் தங்கியிருக்க வேண்டிய அவசிய மில்லை. அன்றைக்கே வீட்டுக்குப் போய்விடலாம். நமக்கு அறுவை சிகிச்சை நடக்கும் போது நாம் விழித்துக்கொண்டே இருக்கலாம். வலி இருக்காது. கண்ணுக்கு மட்டும் தற்காலி கமாக மரத்துப் போவதற்கு மருந்து கொடுத்துவிடுவார்கள்.

லேசர் கருவியை மேல் நோக்கிப் பார்ப்பது போல் நாம் படுத்துக்கொள்ளவேண்டும். டாக்டர் என்ன செய் வார் என்றால் நமக்குத் தேவையான ஒளி விலகல் திருத் தத்தை லேசர் கருவியல் பதிவு செய்துவிடுவார். கண் இமைக்காமல் இருப்பதற்கு ஸ்பெகுலம் என்ற கிளிப் பைப் பொருத்திவிடுவார். அதற்குப் பின் லேசாக விழி வெண்படலத்தின் மேல் இழை திசுக்களை நீக்கிவிடு வார். அதன்பின் கண்ணுக்கு ஒரு கட்டு அவ்வளவுதான் வேலை. வீட்டுக்கு வந்துவிடலாம். இதுதான் ஒளிக்கதிர் சிதறல் அறுவை கிசிச்சை.

விஞ்ஞானம் வளரும் வேகத்தைப் பார்த்தீர்களா? இனி மேல் சத்திர சிகிச்சைக்கும் கத்திக்கும் சம்பந்தமில்லை. அதனால் அறுவை சிகிச்சை என்பதற்குப் பதிலாக வேறு வார்த்தையைக் கண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால் சிகிச்சையில் அறுவையே இல்லையே. அதனால் இனி மேல் சத்திரசிகிச்சை என்றால் யாரும் பயப்பட வேண்டாம்.

ஒரு நோயாளி அப்படித்தான். மருத்துவமனையிலிருந்து தப்பித்து வெளியே ஓடிவந்தான். வாசலில் இருந்தவர் "ஏன் இப்படி பயந்து ஓடி வருகிறாய்?" என்று கேட்டார். "எனக்கு இன்று அறுவை சிகிச்சை அது தான் பயந்து கொண்டு ஓடி வருகிறேன்" என்றான். அந்த ஆள் அதில் என்ன பயம்? இப்போது அதெல்லாம் சுலபம் என்றார் இவர்.

"நான் அறுவை சிகிச்சைக்காக பயப்படாமல் துணி வாகத்தான் இருந்தேன். நர்ஸ் சொன்னதைக் கேட்டதும் தான் பயம் வந்துவிட்டது" என்றான் அவன். "என்ன சொன்னார் நர்ஸ்?" என்று கேட்டார் இவர். இது ஒரு சின்ன சத்திர சிகிச்சைதான்... பயப்படாதீர்கள். தைரியமாக இருங்கள் என்று சொன்னார் என்றான். "அப்படி சொன்ன பிறகு உனக்கென்ன பயம்?" என்றார். "ஐயோ... அந்த நர்ஸ அப்படிச் சொன்னது எனக்கில்லை... அறுவை சிகிச்சை செய்யப் போகும் டாக்டரிடம்" என்றான் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மக்களின் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாத வகையில் பொலிஸார் செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

மக்களின் நம்பிக்கைக்கு பங்கமேற்படாத வண் ணம் சட்டத்தையும், அமைதியையும் காப்பதில் பொலி ஸார் எந்தவித குறையுமின்றி செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொலிஸ் சேவையினூடாக மக்களுக்கு அரும்பணி யாற்றுவதற்கு தான் சில நடவடிக்கைகளை மேற்கொள் வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பொலிஸாருக்கான பாராட்டு வைபவமொன் றில் கலந்துகொண்ட ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதேவேளை பொலிஸ் உத்தியோகத்தர்களது பதவியுயர்வு, சேவை மதிப்பீடு ஆகியவை தொடர்பாக ஜனாதிபதிக்கு பாராட்டுத் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினதும், பிரதமர் பாதுகாப்புப் பிரிவி னதும் உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந் நிகழ்வில் தொடர்ந்து பேசிய ஜனாதிபதி பொலிஸ் சேவையைப் போன்று ஏனைய அரச நிறுவனங்க ளின் வினைத்திறனான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாமலிருக்கிறது. இதற்குக் காரணம் ஊழியர்க ளுக்கிடையே காணப்படும் அதிருப்தியாகும்.

உரிய காலத்தில் பதவியுயர்வு மற்றும் சேவை மதிப் பீடு ஆகியவை கிடைக்காமையினால் உத்தியோகத்தர் களுக்கிடையே விரக்தி ஏற்படுகின்றதென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சட்டத்தை மதிக்கும் ஒழுக்கமான சமுதாயத்தை நாளைய சந்ததியினருக்கு வழங்குவதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பு போற்றத்தக்கதாகும்.

இதற்காக அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர் களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாகவும் ஜனாதி பதி பாராட்டிப் பேசினார். (க-7)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தின் (**Institute of chemistry ceylon**) இரசாயன விஞ்ஞானங் கள் கல்லூரி (**College of chemical sciences**) எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள 4 வருட இரசாயன பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் இரசாயன துறையில் தரமான பட்டத்தைப் பெறுவதற்கு இக்கற்றை வழியமைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள இந்த 4 வருடப் பட்டப்படிப்பு பரந்தளவில் அங்கீகரிக்கப் பட்டது எனவும் குறைந்த கட்டணத்தில் கற்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கை குறித்து விளக்கமளிக்கும் கருத்தரங் குகள் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கும் யூன் 3ஆம் திகதி மு.ப.10.30 மணிக் கும் ஜுலை 4ஆம் திகதி பி.ப. 3 மணிக்கும் ஜுலை 23ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கும் ஆகஸ்ட் 10ஆம் திகதி மு.ப.10.30மணிக்கும் செப்ரெம்பர் 5ஆம் திகதி பி.ப. 3.00மணிக்கும் இல 341/22, கோட்டை வீதி, வெலிக்கடை இராஜகிரியவில் உள்ள கல்லூரியில் நடை பெறவுள்ளன.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு மேற் படி விலாசத்திற்கு 27 ரூபாய் 50 சதம் பெறுமதியுடைய முத்திரை அடங்கிய '6x9' அளவிலான தபால் உறை யினை சுய விலாசமிட்டு அனுப்பலாம் எனவும் 0112-86 1231, 2861653, 4615230 ஆகிய தொலைபேசி இலக் கங்களூடாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது. (க-9)

# தரமற்ற பசு நெய்யினை விற்ற வர்த்தகருக்கு 5000 ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தரமற்ற பசு நெய்யை விற்பனை செய்த வர்த்தகருக்கு எதிராக கடந்த மாதம் 24ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய் யப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா சம்பந்தப்பட்ட வியாபாரி 5ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்தவேண்டும் என உத்தரவிட்டார்.

யாழ். நகர வர்த்தக நிலையம் ஒன்றில் விற்பனைக் காக வைக்கப்பட்டிருந்த பசு நெய்யின் மாதிரியைப் பெற்ற யாழ்ப்பாண மாநகரசபையின் பொது சுகாதாரப் பரி சோதகர் அரசாங்க இராசாயனப் பகுப்பாய்வுப் பிரி விற்கு அனுப்பிய போது பசு நெய்யில் காணப்பட வேண் டிய கொழுப்பு இல்லாதிருந்த தோடு அனுமதியளிக்கப் படாத நிறத்தினை கலப்படம் செய்தமை தெரிய வந்தது.

இதனையடுத்து குறித்த விற்பனை நிலைய உரி மையாளருக்கு எதிராக கடந்த 24ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நீதிவான் வழக்கை விசாரணை செய்த போது குற் றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இத னால் 5ஆயிரம் ரூபாவை தண்டமாக அறவிட வேண் டும் என நீதிவான் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (க-132,133)

# சர்வதேச மனித உரிமைக்கான மாநாடு நாளை ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைக்கான மாநாடு நாளை வெள்ளிக்கிழமை முதல் 10 ஆம் திகதி வரை ஐதரா பாத் ராம்நாத்பூர் நகரில் சிறுவர் உரிமையும் உண வும் என்னும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.



இம் மாநாடு சர்வதேச சிறுவர் உரிமைக்கான பாதுகாப்பு போரம் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் திவாசில்கா நந்தினி நாயக் தலைமையில் நடைபெறும். 400 பிரதிநிதிகள் வரை இம் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த சர்வதேச உரிமைக்கான மாநாட்டில் இலங்கையின் சார்பில் சிதம்பரம் மோகன் கலந்துகொள்வார். இவர் சுதந்திர தொழிற்சங்க அபிவிருத்திக்கான நிலையம் மற்றும் இலங்கை சுதந்திர முன்பள்ளி ஆசி ரியர் அமைப்பின் சார்பாகவும் வடகிழக்கு சுயாதீன மனித உரிமை அமைப்பு சார்பிலும் கலந்துகொள்ள வுள்ளார்.

அத்துடன் இம் மாநாட்டில் அவர் இலங்கை சிறு வர் உரிமை தொடர்பாக விசேட உரையையும் ஆற்ற வுள்ளார். அதேபோன்று இம் மாநாட்டின் சிறுவர்களு டைய உரிமை, கல்வி, கலாசார, எதிர்கால வேலைத் திட் டங்கள் சம்பந்தமாகவும் இம் மாநாட்டில் பேசவுள்ளார்.

இவர் தொழிற்சங்க சிரேஷ்ட சட்ட ஆலோசகரும் சமூக ஆய்வாளரும் வன்முறையற்ற தொடர்பாடலுக் கான நெதர்லாந்தின் விசேட டிப்ளோமாவையும் பெற் றுள்ளார். மேலும் மனித உரிமைக்கான கொழும்பு பல் கலைக்கழக மாணவருமான இவர், தமது மனித உரிமைக் கான ஆய்வினை திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழ கத்தில் மேற்கொள்ளவுள்ளார். (க-49)

# மஹோற்சவம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வியாபாரிமூலை பளவத்தை அருள் மிகு ஸ்ரீகாளியம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 12ஆம் திகதி வைரவர் மடையும் நடை பெறும்.

உற்சவகாலங்களில் தினந்தோறும் அடியார்க ளுக்கு அன்னப் பிரசாரம் வழங்கப்படும் என்று ஆல யத் தலைவர் பீ.சின்னையா அறிவித்துள்ளார். (க-52)

# முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத் தமிழ் மன் றம் நடாத்தும் முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்றும் முற்பகல் 9 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டப வீரமணிஐயர் அரங்கில் முத்தமிழ் மன்றத் தலைவர் கு. உதயகுமார் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு கல்வி வலய ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளரும் கோப்பாய் ஆசிரியர் கலா சாலை ஓய்வுபெற்ற விரிவுரையாளருமான வே. சுப்பிர மணியமும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வு பெற்றபிரதி அதிபர் பொன். தெய்வேந்திரமும் பிரதம விருந் தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவின் வாழ்த்துரைகளை முத் தமிழ் மன் றக் காப்பாளர் வி.கந்தசாமிஐயரும், சிரேஷ்ட விரிவுரை யாளர் வே.கா.கணபதிப்பிள்ளையும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து இறுவெட்டும் பத்திரிகை ஒன்றும் வெளி யிடப்படவுள்ளது. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் பத்தி ரிகை வெளியீட்டுரையை நிகழ்த்துவார். பொன். தெய் வேந்திரம் இறுவெட்டை வெளிட்டு வைப்பார். (க-7)

# அடிக்கடி ஏற்படும் மின்தடை

தென்மராட்சிப் பகுதியில் கடந்த சில வாரங்களாக இரவு வேளையில் மின்சாரம் தடைப்பட்டு வருகின்றது. இதனால் எதிர்வரும் மாதம் நடைபெற இருக்கும் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே மாணவர்களின் நன்மை கருதி இரவு நேரமின் வெட்டை தவிர்த்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மாணவர்களின் பெற்றோர் கோருகின் றனர். (க-37)

# உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

உலகில் உள்ள கோடிக்கணக்கான இரசிகர்கள் எதிர்பார்த்துள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஜுன் மாதம் 9ஆம் திகதி ஜேர்மனியில் உள்ள முனீச் நகரில் கோலாகலமாக ஆரம்பமாக வுள்ளது.

இந்த உலகக்கிண்ணப் போட்டியில் 'ஏ' -தொடக்கம் 'எச்' வரையில் 8 குழுக்களாக பிரிக்கப்பட்ட மொத்தம் 32 நாடுகளின் அணிகள் பங்கேற்கின்றன.

ஜுன் மாதம் 9ஆம் திகதி முதல் ஜுன் 23ஆம் திகதி வரை லீக் போட்டிகள் நடை பெறும். தொடர்ந்து 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை தெரிவுப் போட்டிகள் நடைபெறும்.

ஜுலை மாதம் முதலாம், 2ஆம் திகதி களில் காலிறுதிப் போட்டி நடைபெறும்.

அரையிறுதிப் போட்டிகள் எதிர்வரும் ஜுலை 4ஆம், 5ஆம் திகதிகளில் நடை பெற்று தொடர்ந்து ஜுலை 8ஆம் திகதி 3ஆவது, 4ஆவது இடங்களுக்கான போட்டி நடைபெறும். இறுதிப் போட்டி ஜுலை மாதம் 9ஆம் திகதி நடைபெறும்.

**போட்டி நேர அட்டவணைகள்:**

**லீக் போட்டிகள்**

**ஜுன் 9 வெள்ளிக்கிழமை**

குழு - 'ஏ'
ஜேர்மனி எதிர் கோஸ்டாரிக்கா
மைதானம் - முனீச்
போலந்து எதிர் ஈக்குவடோர்
மைதானம் - ஜெல் சென் கிர் சென்

**ஜுன் 10 சனிக்கிழமை**

குழு - 'பி'
இங்கிலாந்து எதிர் பராகுவே
மைதானம் - பிராங்போட்
டிரினிடாட் எதிர் சுவீடன்
மைதானம் - டோற் முன்ட்
குழு - 'சி'
ஆர்ஜென்டீனா எதிர் ஐவரிகோஸ்ட்
மைதானம் - ஹம்பூர்க்

**ஜுன் 11 ஞாயிற்றுக்கிழமை**

குழு - 'சி'
சேர்பியா எதிர் நெதர்லாந்து
மைதானம் - லீப்ஷிக்
குழு - 'டி'
மெக்சிக்கோ எதிர் ஈரான்
மைதானம் - நுரேம்போர்க்
அங்கோலா எதிர் போர்த்துக்கல்
மைதானம் - கொலோக்ன்

**ஜுன் 12 திங்கட்கிழமை**

குழு - 'எவ்'
அவுஸ்திரேலியா எதிர் ஜப்பான்
மைதானம் - ஹைசேர்ஸ்லேயூரேன்
குழு - 'ஈ'
அமெரிக்கா எதிர் செக்குடியரசு
மைதானம் - ஜெல்சென்கிர்சென்
இத்தாலி எதிர் கானா
மைதானம் - கனோவர்

**ஜுன் 13 செவ்வாய்க்கிழமை**

குழு - 'ஜி'
தென்கொரியா எதிர் டோஹா
மைதானம் - பிரங்பூட்
பிரான்ஸ் எதிர் சுவிற்சர்லாந்து
மைதானம் - ஸ்ருற்காட்
குழு - 'எவ்'
பிரேசில் எதிர் குரோசியா
மைதானம் - பேர்லின்

**ஜுன் 14 புதன்கிழமை**

குழு - 'எச்'
ஸ்பெயின் எதிர் உக்ரைன்
மைதானம் - லீப்ஷிக்
டினிசியா எதிர் சவுதி அரேபியா
மைதானம் - முனீச்
குழு - 'ஏ'
ஜேர்மனி எதிர் போலந்து
மைதானம் - டோட்மண்ட்

**ஜுன் 15 வியாழக்கிழமை**

குழு - 'ஏ'
ஈக்குவடோர் எதிர் கோஸ்டாரிகா
மைதானம் - ஹம்பூர்க்
குழு - 'பி'
இங்கிலாந்து எதிர் டிரினிடாட்
மைதானம் - நுரேம்பேர்க்
சுவீடன் எதிர் பராகுவே
மைதானம் - பேர்லின்

## ஜேர்மனி - 2006

**ஜுன் 16 வெள்ளிக்கிழமை**

குழு - 'சி'
ஆர்ஜென்டீனா எதிர் சேர்பியா
மைதானம் - ஜெல் சென்கிர்சென்
நெதர்லாந்து எதிர் ஐவரிக்கோஸ்ட்
மைதானம் - ஸ்ருற்காட்
குழு - 'டி'
மெச்சிக்கோ எதிர் அங்கோலா
மைதானம் - ஹனோவர்

**ஜுன் 17 சனிக்கிழமை**

குழு - 'டி'
போர்த்துக்கல் எதிர் ஈரான்
மைதானம் - பிராங்பூட்
குழு - 'ஈ'
செக்குடியரசு எதிர் கானா
மைதானம் - கோலோக்ன்
இத்தாலி எதிர் அமெரிக்கா
மைதானம் - ஹைசேர்ஸ்லேயூரேன்

**ஜுன் 18 ஞாயிற்றுக்கிழமை**

குழு - 'எவ்'
ஜப்பான் எதிர் குரோஷியா
மைதானம் - நுரேம்பேர்க்
பிரேஸில் எதிர் ஆஸ்திரேலியா
மைதானம் - முனீச்
குழு - 'ஜீ'
பிரான்ஸ் எதிர் தென்கொரியா
மைதானம் - லீப்ஷிக்

**ஜுன் 19 திங்கட்கிழமை**

குழு - 'ஜீ'
டோஹா எதிர் சுவிற்சர்லாந்து
மைதானம் - டோர்ட்மண்ட்
குழு - 'எச்'
சவூதி அரேபியா எதிர் உக்ரைன்
மைதானம் - ஹம்பூர்க்
ஸ்பெயின் எதிர் டினிசியா
மைதானம் - ஸ்ருற்காட்

**ஜுன் 20 செவ்வாய்க்கிழமை**

ஈக்குவடோர் எதிர் ஜேர்மனி
மைதானம் - பேர்லின்
கோஸ்டாரிகா எதிர் போலந்து
மைதானம் - ஹனோவர்
குழு - 'பி'
சுவீடன் எதிர் இங்கிலாந்து
மைதானம் - கொலோன்
பராகுவே எதிர் ட்ரினிடாட்
மைதானம் - ஹைசேர்ஸ்லேயூரேன்

**ஜுன் 21 புதன்கிழமை**

குழு - 'டி'
போர்த்துக்கல் எதிர் மெக்ஸிக்கோ
மைதானம் - ஜெல்சென்கிர்சென்
ஈரான் எதிர் அங்கோலா
மைதானம் - லீப்ஷிக்
குழு - 'சி'
நெதர்லாந்து எதிர் ஆர்ஜென்டீனா
மைதானம் - பிராங்பூட்
ஐவரிகோஸ்ட் எதிர் சேர்பியா
மைதானம் - முனீச்

**ஜுன் 22 வியாழக்கிழமை**

குழு - 'ஈ'
செக்குடியரசு எதிர் இத்தாலி
மைதானம் - ஹம்பூர்க்
கானா எதிர் அமெரிக்கா
மைதானம் - நுரேன்பேர்க்
குழு - 'எவ்'
ஜப்பான் எதிர் பிரேஸில்
மைதானம் - டோட்மண்ட்
குரோஷியா எதிர் அவுஸ்திரேலியா
மைதானம் - ஸ்ருற்காட்

**ஜுன் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

குழு - 'எச்'
சவூதி அரேபியா எதிர் ஸ்பெயின்
மைதானம் - ஹைசேர்ஸ்லேயூரேன்
உக்ரைன் எதிர் டினிசியா
மைதானம் - பேர்லின்
குழு - 'ஜீ'
டோஹா எதிர் பிரான்ஸ்
மைதானம் - கொலோன்
சுவிற்சர்லாந்து எதிர் தென்கொரியா
மைதானம் - ஹனோவர்

**ஜுன் 24 சனிக்கிழமை**

ஆட்டம் - 1
குழு 'ஏ'யின் (வின்னர்) வெற்றி பெற்ற அணி எதிர் குழு 'பி'யின் (ரன்னர்)புள்ளி ரீதியாக தெரிவான அணி
மைதானம் - முனீச்

ஆட்டம் - 2
குழு 'சி'யில் வெற்றி பெற்ற அணி எதிர் குழு 'டி'யில் புள்ளி ரீதியாக தெரிவான அணி
மைதானம் - லீப்ஷிக்

**ஜுன் 25 ஞாயிற்றுக்கிழமை**

ஆட்டம் - 3
குழு 'பி'யில் வெற்றி பெற்ற அணி எதிர் குழு 'ஏ'யில் புள்ளி ரீதியாக தெரிவான அணி
மைதானம் - ஸ்ருற்காட்

ஆட்டம் - 4
குழு 'டி'யில் வெற்றிபெற்ற அணி எதிர் குழு 'சி' யில் புள்ளி ரீதியாகத் தெரிவான அணி
மைதானம் - நுரேம்போர்க்

**ஜுன் 26 திங்கட்கிழமை**

ஆட்டம் - 5
குழு 'ஈ'யில் வெற்றி பெற்ற அணி எதிர் குழு 'எவ்' இல் புள்ளி ரீதியாக தெரிவான அணி
மைதானம் - ஹைசேர்ஸ்லேயூரேன்

ஆட்டம் - 6
குழு 'ஜி'யில் வெற்றி பெற்ற அணி எதிர் குழு 'எச்' சில் புள்ளி ரீதியாக தெரிவான அணி
மைதானம் - கொலோன்

**ஜுன் 27 செவ்வாய்க்கிழமை**

ஆட்டம் - 7
குழு 'எவ்'வில் வெற்றி பெற்ற அணி எதிர் குழு 'ஈ'யில் புள்ளி ரீதியாக தெரிவான அணி
மைதானம் - டோட்மண்ட்

ஆட்டம் - 8
குழு 'எச்'சில் வெற்றி பெற்ற அணி எதிர் குழு 'ஜி'யில் புள்ளி ரீதியாக தெரிவான அணி
மைதானம் - ஹனோவர்

**ஜுன் 30 வெள்ளிக்கிழமை**

காலிறுதிப் போட்டி - 1
ஆட்டம் - 1 இல் வெற்றிபெற்ற அணி எதிர் ஆட்டம் 2 இல் வெற்றி பெற்ற அணி
மைதானம் - பேர்லின்

காலிறுதிப் போட்டி - 2
ஆட்டம் - 5 இல் வெற்றிபெற்ற அணி எதிர் ஆட்டம் - 6 இல் வெற்றி பெற்ற அணி
மைதானம் - ஹம்பூர்க்

**ஜுலை 1 சனிக்கிழமை**

காலிறுதிப் போட்டி - 3
ஆட்டம் - 3இல் வெற்றிபெற்ற அணி எதிர் ஆட்டம் - 4 இல் வெற்றி பெற்ற அணி
மைதானம் - ஜெல்சென் கிர்சேன்

**வட்டு. R.U.பாலமுருகன்**

காலிறுதிப் போட்டி - 4
ஆட்டம் - 7இல் வெற்றிபெற்ற அணி எதிர் ஆட்டம் - 8இல் வெற்றி பெற்ற அணி
மைதானம் - பிராங்பூட்

**ஜுலை 4 செவ்வாய்க்கிழமை**

அரையிறுதிப் போட்டி - 1
காலிறுதிப் போட்டி 1இல் வெற்றிபெற்ற அணி எதிர் காலிறுதிப் போட்டி 2இல் வெற்றி பெற்ற அணி
மைதானம் - டோட்மண்ட்

**ஜுலை 5 புதன்கிழமை**

அரையிறுதிப் போட்டி - 2
காலிறுதிப் போட்டி 3இல் வெற்றிபெற்ற அணி எதிர் காலிறுதிப் போட்டி 4இல் வெற்றி பெற்ற அணி
மைதானம் - முனீச்

**ஜுலை 8 சனிக்கிழமை**

3ஆவது, 4ஆவது இடத்திற்கான தெரிவுப் போட்டி
அரையிறுதி 1 தோல்வியடைந்த அணி எதிர் அரையிறுதி 2 தோல்வியடைந்த அணி
மைதானம் - ஸ்ருற்காட்

**ஜுலை 9 ஞாயிற்றுக்கிழமை**

இறுதிப்போட்டி
அரையிறுதிப் போட்டி 1 இல் வெற்றி பெற்ற அணி எதிர் அரையிறுதிப் போட்டி 2இல் வெற்றி பெற்ற அணி
மைதானம் - பேர்லின். (வளம்)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும்!

**ஜே.வி.பி ஜனாதிபதியிடம் வலியுறுத்து**

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பாரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜே.வி.பி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறுகையில்,

20ஆண்டுகால யுத்தத்தினால் விடுத லைப் புலிகள் பெற்ற பலனைவிட இந்த நான்கு ஆண்டுகால யுத்தநிறுத்த ஒப்பந் தத்தால் நிறையப் பலனடைந்துள்ளனர்.

ஜெனிவாவில் இம்மாதம் பேச்சுக்கள் நடந்தவுள்ள அரசாங்கக் குழுவினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பாரிய திருத்தங்களை மேற்கொள்ள முனைய வேண்டும்.

முதல் சுற்றுப் பேச்சில் அரசாங்கக் குழு வினர் கடைப்பிடித்த மென்மைப் போக்கை சகித்துக் கொண்டோம். யுத்த நிறுத்த ஒப்பந்த தினால் நாட்டினது பாதுகாப்பை விலையாகக் கொடுத்து மற்றொரு தரப்பு மட்டுமே பயனடை யக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றும் வகையிலான யுத்த நிறுத்த ஒப்பந்த திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். இதை இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் அரசாங் கக்குழு வலியுறுத்தியாக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மஹிந்தவுடன் ஜே.வி.பி செய்துகொண்ட ஒப்பந்தத்தில் நோர்வேயை வெளியேற்ற வேண்டும். யுத்தநிறுத்த ஒப்பந்தம் திருத்தப் படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக் கிறது. அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்து மாறு மஹிந்த ராஜபக்ஷவை இப்போது நாம் வலியுறுத்துவோம்.

விடுதலைப்புலிகளுக்குப் பக்கச்சார்பான நிலையைத்தான் நோர்வே தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது. அண்மையில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலை வராக இருந்த ஹக்ரூப் ஹொக்லெண்ட், விடுதலைப்புலிகளை விடுதலை போராட்ட வீரர்கள் என்று புகழ்ந்துள்ளார். இத்தகைய நிலைப்பாடுகளினால்தான் நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என வலியுறுத்து கிறோம் என்றார். (க)

## ரயில் சேவையை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

15 ரயில் இன்ஜின்களையும், 30 ரயில் பெட்டிகளையும் இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தங்கள் வெகுவிரைவில் கைச்சாத் திடப்படுமென்று அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

இதற்கான கடன் வசதியை சீன அர சாங்கம் வழங்க இருக்கிறது.

அடுத்த ஆறுமாத காலத்தினுள் இந்தப் புதிய ரயில் இன்ஜின்களும், ரயில் பெட்டி களும் சேவையில் சேர்த்துக்கொள்ளப் படுமென்றும் அவர் மேலும் கூறினார். (க-7)

## உடற்பயிற்சிப் போட்டிகள்

தென்மராட்சி வலய பாடசாலைகளுக் கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர் வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை கொடிகா மம் அ.த.க.பாடசாலையில் நடைபெறும் என தென்மராட்சி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (க-108)

# லண்டன் செல்லும் நர்த்தன விநாயகர்



சேலத்தில் தயாராகி வரும் ஐம்பொன் சிலை ஒன்று லண்டன் மியூசியத்தில் நடக்கவுள்ள அகில உலக கைவினை கலைஞர்களின் விருதுக்கான சிற்பக் கண்காட்சியில் இடம் பெறவுள்ளது.

ஐம்பொன்னினால் ஆன இந்த ஆனந்த நர்த்தன கணபதி சிலையின் உயரம் ஏழரை அடி. அகலம் மூன்றே முக்கால் அடி. எடை 2.5 தொன். சிற்ப சாஸ்திர ஆகம முறைப்படி மிக நுணுக்கமாக இந்தச் சிலை செய்யப்பட்டு வருகிறது.

நடனம் புரியும் தோற்றத்தில் உள்ள நர்த்தன கணபதியின் பாதத்தின் அருகே சிறிய அளவிலான மூஞ்சூறு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிலையின் வலதுபுறம் ஔவையாரும் இடதுபுறம் ஜபமாலையுடன் அகத்தியரும் நிற்கின்றனர். கணபதியின் பின்பக்கம் இரண்டு பூத கணங்கள் காட்சி தருகின்றன. ஒரு பூத கணம் கூடையில் லட்டுக்களை சுமந்தபடி நிற்க, மற்றொன்று பலாப்பழம் ஒன்றைச் சுமந்தபடி நிற்கிறது.

கலை அழகுடன் கூடிய இந்த ஐம்பொன் சிலை. 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் லண்டன் கண்காட்சியில் இந்தியாவின் சார்பில் இடம்பெறுகிறது.

# வழி தவறிய முள்ளம்பன்றி குட்டி!

வனங்களில் வாழும் விலங்குகள் மனிதர்கள் வசிக்கும் வனங்களை ஒட்டியுள்ள பகுதிகளுக்குள் புகுந்து விடுகின்றன. யானை, சிறுத்தை, புலி, காட்டெருமை போன்றவை இப்படி அடிக்கடி விசிட் செய்கின்றன. வனங்களில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர், உணவு பற்றாக்குறையே இதற்குக் காரணம்.



இந்த வகையில் சில நேரங்களில் முள்ளம் பன்றிகள் கூட இரைதேடி தோட்டங்களுக்கு வந்து விடுகிறது. முள்ளம் பன்றி அதிகபட்சம் ஐந்து கிலோ வரை எடை இருக்கும். புதர், கற்குழிகளில் வாழும், மனிதர்களை காணும் போது பயத்தில் முள்ளம் பன்றிகள் முட்களைச் சிலிர்க்கும். அப்போது அதன் உடம்பிலிருந்து கிளம்பும் முட்கள் மனிதர்கள் உடலில் குத்திக் காயப்படுத்தும்.

முள்ளம் பன்றிகளை எளிதில் பிடிக்கமுடியாது. பொள்ளாச்சி அடுத்த மண்ணூர் கிராமத்தில் மகாலிங்கம் என்பவர் தோட்டத்தில் வளர்க்கப்படும் நாய் ஒன்று சமீபத்தில் முள்ளம் பன்றி குட்டி ஒன்றை கவ்விக்கொண்டு வந்தது. பிறந்து 10 நாட்களே ஆன இந்தக் குட்டி நாயிடம் இருந்து மீட்கப்பட்டு வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

# வெளிநாட்டு விநோதங்கள்

## ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமையான கல் வீடுகள்




கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகளை அறிந்து கொள்ள ஆங்காங்கே கிடைக்கும் கல்வெட்டுக்கள், பட்டயங்கள், நாணயங்கள், பூமியில் புதையுண்ட பொருட்கள் உதவுகின்றன.

இந்த வகையில் உடுமலைப் பேட்டை அருகே மறையூர் பகுதியில் நான்காயிரம் முதல் ஐந்தாயிரம் ஆண்டுகள் வரை பழமை வாய்ந்த கல் வீடுகள் மற்றும் பாறை ஓவியங்களை சமீபத்தில் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

உடுமலைப்பேட்டையில் இருந்து 45 கிலோமீற்றர் தொலைவில், கேரள எல்லையில் உள்ளது மறையூர். இங்கு தமிழர்கள் அதிகமாக வசிக்கும் ஐந்து நாடு என்ற பகுதி உள்ளது. இங்கு சில மாதங்களுக்கு முன் வில்லுடன் கூடிய ராமர் சிலை கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சியால் தற்போது இங்கு கல் வீடுகள் மற்றும் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கல் வீடுகள் மூன்று, நான்கு அறைகளைக்கொண்டுள்ளன.

இவற்றில் மக்கள் வசித்ததற்கான ஆதாரங்கள் தென்படுகின்றன. இதுவரை மலை உச்சிகளில் மட்டுமே இருந்த கல் வீடுகள் அறியப்பட்டன. தற்போது சமவெளி பகுதிகளிலும் இதுபோன்ற கல் வீடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இது மட்டுமில்லாமல், ஆலம்பட்டி வனப்பகுதியில் அதிக எண்ணிக்கையில் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. மொழி அறியாத நிலையில் பழங்கால மக்கள் தங்களுக்குள் சைகை மூலமும், ஓவியங்கள் மூலமும தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் இந்த ஓவியங்கள் அமைந்துள்ளன. பாறைகளில் மான்,யானை, புலி, ஆடு போன்ற விலங்குகளின் உருவங்கள் தத்ரூபமாக வரையப்பட்டுள்ளன.




ஐந்தாயிரம் ஆண்டுகள் ஆகியும் பாறை ஓவியங்கள் மறையாமல் இருப்பது வியப்பாக உள்ளது. சில ஓவியங்கள் சிவப்பு நிறத்திலும், சில ஓவியங்கள் வெள்ளை நிறத்திலும் காணப்படுகின்றன. ஆதி மனிதர்கள் விலங்குகள் பற்றிய தங்கள் அறிவை ஓவியம் வரைவதன்மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். ஒரு சில ஓவியங்கள் மனிதனின் செயல்பாடுகளைக் குறிக்கும் வயையிலும் உள்ளது.

தேன் சேகரிக்கும் போது கையாளப்படவேண்டிய முறைகள் பற்றி விளக்கும் வகையில் தேன் கூடு, தீப்பந்தம், தீப்பந்தத்துடன் நிற்கும் மனிதன் என ஒரு ஓவியம் வரையப்பட்டுள்ளது. தேன் எடுக்கும் முறை அக்கால மனிதனுக்குத் தெரிந்திருந்தது என இதன் மூலம் அறியலாம்.

# நகைத்தொழிலாளர்களின் சோகம்

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நகைத்தொழிலாளர்கள் மூலம் நகைகள் தயாரிக்கப்பட்டு கடைகளில் விற்பனை செய்யப்பட்டன. இந்த முறை மூலம் நகை செய்யும் தொழிலாளர்களுக்குச் சேதாரம், கூலி என்ற பெயரில் இலாபம் கிடைத்து வந்தது.



தற்போது தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக நகைகள் அனைத்தும் மெஷின்கள் மூலம் செய்யப்படுகின்றன. நகைகளைச் செய்ய மெஷின்களைப் பயன்படுத்துவதால் பெண்களை ஈர்க்கும் வகையில் பலவிதமான டிசைன்களில் நகைகளைச் செய்ய முடிகிறது.

மெஷின் கட்டிங் மூலம் குறைந்த எடையில் பல்வேறு டிசைன்களில் தயாரிக்கப்படும் நகைகளுக்குப் பெரும் வரவேற்பு இருப்பதால், முந்தைய முறையை நகைக்கடை உரிமையாளர்கள் கைவிட்டு விட்டனர். இதனால், பாரம்பரியமாக நகை தொழிலில் ஈடுபட்டு வந்த உள்ளூர் நகைத்தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழந்து தவித்து வருகின்றனர்.

தொழில் நஷ்டம், வறுமை போன்ற காரணங்களால் பலர் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ளும் அவலமும் அவ்வப்போது நடக்கிறது.

# விமானத்தயாரிப்பில் விந்தை

மதுரையை அடுத்த வீரபஞ்சம் கிராமத்தைச் சேர்ந்தவர் பார்த்சாரதி. எல்ரோனிக் டிப்ளோமா படித்த இவர் ரி.வி பழுது பார்க்கும் கடை வைத்து நடத்தி வருகிறார்.




சிறுவயது முதலே இவருக்கு விமானம் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புக்கள் குறித்த விஷயத்தில் ஆர்வம் அதிகம். கடந்த 1993 ஆம் ஆண்டு வயர் மூலம் விண்ணில் பறக்கக்கூடிய கொன்ட்ரோல் லைன் ஏர்கிராப்ட் எனப்படும் சின்னஞ்சிறிய விமானத்தை இவர் வடிவமைத்தார்.

இந்த குட்டி விமானம் விமான வடிவமைப்பு வல்லுனர்களைக் கூட அதிசயிக்க வைத்தது. அவர்கள் கொடுத்த உற்சாகத்தைத் தொடர்ந்து ரிமோட் கொன்ட்ரோல் மூலம் இயங்கும் குட்டி விமானத்தைப் பார்த்வசாரதி தயாரித்தார். மேலும், 100 சி.சி கொண்ட முழு இயக்க ஏரோபட்டிக் விமானம் 4 சி.சி சாதாரண விமானம் என்று 10க்கும் மேற்பட்ட குட்டி விமானங்களைத் தயாரித்து அவற்றை வெற்றிகரமாக இயக்கியும் காட்டினார்.

சமீபத்தில் புதுவை, வில்லியனூர் ஆச்சார்யா பள்ளியில் நடந்த பினோமி விழாவில் பார்த்தசாரதி கலந்துகொண்டு ஏரோமொடலிங் விமான சாகசங்களை நிழத்திக்காட்டி பாராட்டுக்களை அள்ளிச் சென்றார்!

# புற்றுநோய்க்கு காரணமாகும் உணவுகள்



ஒருவருக்குப் புற்றுநோய் பல்வேறு காரணங்களினால் ஏற்படலாம். நாம் அன்றாடம் உணவாகப் பயன்படுத்தும் சில வகை உணவுப் பொருட்களும் புற்றுநோய்க்குக் காரணமாக அமைந்து விடுவதாக டாக்டர்கள் கூறுகின்றனர். பச்சரிசி, வெள்ளை ரொட்டி, உருளைக் கிழங்கு சிப்ஸ் இந்த மூன்றும் புற்றுநோயை ஏற்படுத்தும் தீய உணவுகள் என்று அமெரிக்காவின் தேசிய புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துள்ளது.

இந்த மூன்றையும் கட்டி கட்டியாகச் சாப்பிடுவதால் மாச் சத்து உடலில் அதிகமாகி கணையச் சுரப்பி சார்ந்த புற்றுநோய் விரைந்து ஏற்படுகிறதாம்.

மாச் சத்து அதிகமுள்ள இந்த மூன்று உணவுகளையும் வயிறு முட்டச் சாப்பிடுவதும், சாப்பிட்டு விட்டு, ஒரே இடத்தில் உட்கார்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்ப்பதால் உடற்பயிற்சி கிடைக்கப் பெற முடியாமல் சிலருக்கு உடல் கொழுத்து விடுகிறது. இதனால் கணையச் சுரப்பியில் புற்றுநோய் உண்டாகும் அபாயம் ஏற்படுகிறது என்பதும் அந்தக் கண்டுபிடிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

கடலில் கிடைக்கும் சங்கை காதில் வைத்து கேட்கும் போது அதில் இருந்து அலை ஓசை சத்தம் வருவது போல காதுகளில் சத்தம் கேட்கும். இதை சிலர் கடல் அலையின் ஓசை என்று நினைத்துக் கொள்வதுண்டு. ஆனால் உண்மையில் அது கடல் அலை ஓசை அல்ல. உங்கள் காதுகளில் உள்ள இரத்தக் குழாயில் இரத்தம் பாய்ந்து செல்லும் சத்தம் தான் உங்களுக்கு கடல் அலை ஓசையாக கேட்கிறது.




# "ரோபோ" நர்ஸ்

நோயாளிகளைப் பராமரிக்கும்தாதிகளின் பணி சவால் நிறைந்ததாகும். அதிக உடல் எடை கொண்ட நோயாளிகளைத் தூக்குவது, அவர்களுக்கு உடல் சுத்தம் செய்வது போன்ற பணிகளைக் கவனிக்கத் தாதிகள் மிகுந்த சிரமம் அடைகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வந்துள்ளது தான் எந்திர நர்ஸ்.


ஜப்பானைச் சேர்ந்த பிசிக்கல் அன்ட் கெமிக்கல் ரிச்சர்ச் நிறுவனம் இந்த ரோபோ நர்ஸ்சை உருவாக்கியுள்ளது. இதன்



பெயர் ரி-மேன். 158 சென்ரிமீற்றர் உயரமும், 100 கிலோ எடையும் கொண்ட இந்த ரோபோ, மருத்துவமனைகளில் எழுந்து நடமாட முடியாமல் தவிக்கும் முதியவர்களையும், நோயாளிகளையும் கைகளில் ஏந்தித் தூக்கிச் செல்லும். இந்தப் பணிகளைக் கவனிக்கும் வகையில் மிக நுட்பமான கருவிகள் இந்த ரோபோ நர்ஸ் கருவியில் இணைக்கப்பட்டுள்ளது.

நகோயா என்ற இடத்தில் உள்ள ரிக்கன்ஸ் ஆராய்ச்சிக் கூடத்தில், மனித உருவில் ஒரு பொம்மையை ரோபோ நர்சு கைகளால் அலாக்காகத் தூக்கிய காட்சியைத் தான் படத்தில் காண்கிறீர்கள்.

# வெண்குஷ்டம் தொற்று நோயா?



வெண்குஷ்டம் உள்ளவர்களுடன் சேர்ந்து பழகினால் அது தங்களுக்கும் தொற்றிக் கொள்ளும் என்று சிலர் பயப்படுகின்றனர். ஆனால் அவ்வாறு பயந்து ஒதுங்கத் தேவையில்லை என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

குஷ்ட நோய் என்பது தொழு நோயைக் குறிக்கும். வெண்குஷ்டம் என்பது விட்டிலைகோ என்ற நோயைக் குறிக்கும். குஷ்டம் உள்ளவர்களோடு நெருங்கிப் பழகினால் அது மற்றவர்களுக்கும் பரவாய்ப்புண்டு. ஆனால் வெண்குஷ்டம் அப்படியல்ல. இது நெருங்கிப் பழகுவதால் மற்றவர்களுக்குத் தொற்றிக் கொள்ளாது.

நம் தோலில் மெலனின் என்னும் நிறமிகள் நிறைய உள்ளன. இந்த நிறமிகள் ஒருவருக்கு எந்த அளவில் உள்ளது என்பதைப் பொறுத்துதான் அவருடைய தோலின் நிறம் நிர்ணயமாகும்.


மெலனின் மிக அதிகமாக இருந்தால் கறுப்பாகி விடுவோம். மிதமாக இருந்தால் மாநிறமாக இருப்போம். மிகக் குறைவாக இருந்தால் சற்று வெள்ளையாக இருப்போம். மெலனின் மிக மிக குறைவாக இருந்தால் வெள்ளைக்காரர் போல தோல் வெள்ளை நிறத்தில் இருக்கும்.

வெண்குஷ்டம் வருபவர்களுக்கு இந்த மெலனின் நிறமிகள் உடலில் ஒரு குறிப்பிட்ட இடங்களில் மட்டும் திட்டு திட்டாக வெள்ளையாகத் தெரியும். இது முழு நரைப்பதைப் போன்றதான். வெண்குஷ்டம் உள்ளவர்களோடு மற்றவர்களும் நெருங்கிப் பழகலாம். தப்பில்லை என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.


# நிலவில் கார் சவாரி!

உலகில் பல நாடுகளில் உள்ள விஞ்ஞானிகள் வானில் நடக்கும் அதிசயங்களை அறிய விரும்பினர். இதனால் போட்டி போட்டு செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பி ஆராய்ச்சி செய்தனர். இந்தப் போட்டியில் உலகின் சர்வவல்லமை படைத்த அமெரிக்கா முன்னணியில் உள்ளது. முதன் முதலில் சந்திரனை ஆய்வு செய்ய 1969 ஆம் ஆண்டு அமெரிக்கா அப்போலோ என்ற விண்கலத்தை அனுப்பியது. அதில் இருந்து இறங்கிய நீல் ஆம்ஸ்ரோங் என்னும் விண்வெளி வீரர் சந்திரனில் முதன் முதலாகக் காலடி எடுத்து வைத்தார். சந்திரனில் இறங்கிய முதல் மனிதன் என்ற பெருமையைத் தட்டிச்சென்றார். அதே ஆண்டு ரஷ்யா ஒரு விண்கலத்தைச் சந்திரனுக்கு அனுப்பியது. அதில் மனிதனுக்குப் பதிலாக இயந்திர மனிதன் இருந்தான். அந்த இயந்திர மனிதன் சந்திரனில் இறங்கிக் கல்லையும் மண்ணையும் எடுத்துக்கொண்டு பூமிக்குத் திரும்பினான்.

விண்வெளியில் இறங்கி ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளுக்கு ஒரு மிகப் பெரிய குறை இருந்து வந்தது. அதாவது நிலவில் இறங்கியவுடன் விண்கலத்தில் இருந்து 1000 அடி தூரம்வரை மட்டும் சென்று ஆராய்ச்சிசெய்ய முடிந்தது. அதிக தூரம் சென்றால் விண்கலத்தில் இருந்து தொடர்பு எல்லைக்கு வெளியே சென்று விடும் நிலை இருக்கும். விண்கலம் அனுப்பும் சிக்னல் கிடைக்காதோ என நினைத்தனர்.



நிலவில் காற்று வசதி இல்லை. புவிசர்ப்பு விசையும் கிடையாது. இதனால் நிலவில் வேகமாக நடக்கவோ, ஓடவோ முடியாது. இதனால் நிலவில் பயணம் செய்யக் கார் போன்று ஏதாவது வாகனம்



இருந்தால் வசதியாக இருக்கும் என விரும்பினர். ஆனால் அந்த ஊர்தி எளிதாக இருக்க வேண்டுமே தவிர கனமாக அமைந்து விடக் கூடாது என நினைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நிலவில் பயணிக்கக் கூடிய வாகனத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் வோஷிங்டனில் உள்ள போயிங் நிறுவனத்தினர் நாசாவின் உதவியுடன் ஈடுபடத் தொடங்கினர். இந்த நிறுவனத்தின் அயராத முயற்சியால் லூனார் ரோவிங் வெகிள் என்ற காரை வடிவமைத்தனர். அந்தக் கார் செல்லமாக மூன்பக்கி என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இந்தக் காரை எளிதாக நிலவில் இறக்கலாம். விண்கலத்தில் அதிக இடத்தை அடைத்துக் கொள்ளாமல் மடக்கி வைக்கும் முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

அதேபோல் நிலவில் இறங்கியவுடன் எளிதாக விண்கலத்தில் இருந்து கீழே இறக்கி பயன்படுத்தலாம். இரண்டு பேர் அமர்ந்து பயணம் செய்யும் வடிவில் இந்தக் கார் அமைக்கப்பட்டிருந்தது. 36 வோல்ட் மின்சார திறனுடன் கூடிய இரண்டு பட்டரியால் இயக்கக் கூடியது.

இந்தக் காரின் முன் பக்க பின்பக்க சக்கரங்களை இயக்க 2 ஸ்டியரிங் உள்ளது. ஏதாவது ஒன்று பழுதடைந்தால் மற்ற ஒன்றைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

அப்போலோ விண்கலம் 15இல் பயணம் செய்த டேவிட் ஸ்கூட், ஜிம் இர்வின், அப்போலோ 16இல் பயணம் செய்த ஜான் யங், சார்ல்ஸ் டியூக், 17இல் பயணம் செய்த ஹாரிஸன் ஆகியோர் மூன்பக்கியில் பயணம் செய்யும் புதிய அனுபவத்தைப் பெற்றனர். அப்போலோ 17இல் பயணம் செய்த, ஹாரிஸன் சந்திரனில் 4 மணி நேரம் 26 நிமிடங்கள் 35.9 கிலோ மீற்றர் பயணம் செய்து நிலவை ஆராய்ச்சி செய்தார்.

# கோப்பி குடிப்பது உடலுக்குத் தீங்கானதா?

சோம்பலைப் போக்கிப் புத்துணர்ச்சியைத் தருவது கோப்பி. இதனால் தொடங்கும் வேலையை உற்சாகமாக ஆரம்பிக்க கோப்பி சாப்பிடுகின்றனர். பலர் குறிப்பிட்ட நோய்களில் மட்டுமே கோப்பி அருந்துவதுண்டு. சிலருக்கு எப்போதும் குடிக்கத் தோன்றும். இதனால் அடிக்கடி கோப்பி குடிப்பவர்கள் அதிக உற்சாகத்துடன் இருப்பார்கள் என்று நினைத்து விடக்கூடாது.

மனிதன் கோப்பி குடிப்பது நதனால்? அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் என்ன என்பது பற்றிய ஆராய்ச்சி அமெரிக்காவில் நடந்தது. இந்த ஆய்விற்கு அதிகமாக கோப்பி குடிப்பவர் ஒரு பிரிவினராகவும், அவ்வப்போது கோப்பி குடிப்பவர் ஒரு பிரிவினராகவும் எடுத்துக்கொள்ளப்பட்டனர். பின்பு அவர்கள் கோப்பி குடிக்கும் அளவு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்தது.

ஆய்வின் முடிவில் அதிகமாக கோப்பி குடிப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது என்ற உண்மை தெரிய வந்தது.

நான் ஒன்றுக்கு 4 கப் அல்லது அதற்கு மேலும் கோப்பி குடிப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு 64 சதவீதம் அதிகரிக்கிறது. அதே சமயம் கோப்பி தேவைப்படும் நேரம் மட்டும் குடிப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு குறைகிறது. இந்த ஆய்வு குறித்து ரோரண்டோ பல்கலைக்கழக ஆய்வாளர் அகமத் சொகிமி கூறியபோது, உங்கள் உடல் தன்மையைப் பொறுத்து கோப்பி குடிப்பதில் தவறில்லை என்றார்.



# கேரளாவிலும் அதிருப்தியாளர்கள் எதிர்ப்பு அலை இடதுசாரி, காங்கிரஸ் கூட்டணிகளுக்கு தலைவலி

(திருவனந்தபுரம்)

கேரள சட்டசபைக்கு முதல்கட்ட வாக்குப் பதிவு ஆரம்பமாக இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், இடதுசாரி மற்றும் காங். தலைமையிலான இரண்டு கூட்டணிகளிலும் சீட் கிடைக்காத அதிருப்தியாளர்களின் எதிர்புக் குரல் வலுக்கத் தொடங்கியுள்ளது.

கட்டுக்கோப்புக்குப் பெயர் பெற்ற கம்யூனிஸ்டுகளுக்கு இது பெரும் தலைவலியாக உள்ளது.

கேரளாவில் 140 சட்டசபைத் தொகுதிகளுக்குத் தேர்தல் மூன்று கட்டங்களாக நடக்கிறது. முதல் கட்டமாக 59 தொகுதிகளில் வருகிற ஏப்.22 ஆம் திகதியும், இரண்டாம் கட்டமாக 66 தொகுதிகளில் ஏப் 29ஆம் திகதியும் மீதமுள்ள 15 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 3ஆம் திகதியும் வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

மார்க்சிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி மற்றும் காங், தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி என பிரதான கட்சிகள் இரு அணிகளாக களத்தில் உள்ளன. இரண்டு கூட்டணிகளிலும் தொகுதி பங்கீடு, வேட்பாளர் அறிவிப்பு எல்லாம் முடிந்துவிட்டது.

முதல்கட்டத் தேர்தலுக்கு வேட்பு மனு வாபஸ் பெறுவதற்கான கடைசி திகதி நேற்றுமுன்தினமுடன் முடிந்து வாக்குப் பதிவுக்கு இன்னும் சில வார காலமே உள்ள நிலையில் இரண்டு கூட்டணிகளில் சீட் பிரச்சினை தொடர்பான அதிருப்தியாளர்களின் எதிர்ப்புக் குரல்கள் வலுவாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

காங் கட்சியில் அதிருப்தி, கோஷ்டி, தகராறுகள் என்பது ஆச்சரியப்படும் விஷயமில்லை. ஆனால், கட்டுக்கோப்பான அரசியலுக்குப் பெயர் பெற்ற கம்யூனிஸ்டுகள் தலைமையிலான இடதுசாரி முன்னணியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது புதிதாகத் தெரிகிறது. இடதுசாரி ஜனநாயக முன்னணியில் அங்கம் வகித்து சீட் மறுக்கப்பட்ட கூட்டணிக் கட்சிக்காரர்கள் பல இடங்களில் கம்யூனிஸ்ட் கூட்டணிக்கு எதிராகவே வேட்பாளர்களை நிறுத்துகின்றனர்.

இடதுசாரி முன்னணியில், 91 தொகுதிகளை மார்க்சிஸ்ட் கம்யூ தன்வசம் வைத்துக்கொண்டுள்ளது. (கம்யூ, சார்பில் களமிறங்கும் ஏழு சுயேச்சைகள் உட்பட). அடுத்த பெரிய கட்சியான இந்தியக் கம்யூனிஸ்டுக்கு 24 தொகுதிகளும், கேரளா காங்கிரஸும் (ஜோசப்)க்கு ஆறு இடங்களும், தேசியவாத காங் இரண்டு இடங்களும் மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு எட்டு, இந்திய தேசிய லீக் மூன்று, ஆர்.எஸ்.பி. நான்கு, கேளரளா காங் (எஸ்) மற்றும் காங்கிரஸ் (எஸ்) ஆகியவற்றுக்குத் தலா ஒன்று இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கடந்த 2004 ஆண்டு நடைபெற்ற தேர்தலை விட இந்த முறை எட்டு தொகுதிகளில் கூடுதலாகப் போட்டியிடும் மார்க்சிஸ்ட் பெரும்பான்மையான இட்ங்களைத் தன் வசம் வைத்துக்கொண்டதில் கூட்டணியினருக்கு மகிழ்ச்சியில்லை.

முதலில் கேரளா காங்கிரஸ் (ஜோசப்) கட்சியில் இருந்து பிரச்சினை கிளம்பியது. தங்கள் கட்சி வலுவாக உள்ள கோட்டயம் மாவட்டத்தில் ஒரே சீட் தான் தரப்பட்டுள்ளது என்றும், முக்கியமாக வடக்கு கேரளாவில் சீட்டே ஒதுக்கவில்லை என்றும் கூறி கே.காங். பிரச்சினை கிளப்பியது. கூட்டணியில் ஒதுக்கப்பட்ட ஆறு இடங்கள் தவிர, 14 தொகுதிகளுக்கு இவர்கள் தனி வேட்பாளர்களை அறிவித்துள்ளனர். இதனால், கோட்டயத்தில் இடதுசாரி கூட்டணி வெற்றி வாய்ப்புக்குப் பாதிப்பு ஏற்படக்கூடும்.

இதேபோல், மதச்சார்பற்ற ஜனதா தளத்தில் நீலலோகிததாசன் நாடாருக்கு இந்த முறை சீட் வழங்கவில்லை என்பதால் அவர் கோவளத்தில் சுயேச்சையாகக் களமிறங்குகிறார். இவர் மீது செக்ஸ் குற்றச்சாட்டு இருப்பதால் சீட் மறுக்கப்பட்டது.

எனினும் கோவளம் உள்ளிட்ட கடலோர கிராமங்களில் இவருக்கு நல்ல செல்வாக்கு இருப்பதால் இடது சாரி ஓட்டுக்கள் இவர் மூலம் சிதறும் எனக் கணிக்கப்படுகிறது. (கு)



மீண்டும் பா.ஜ, பொது செயலராக நியமிக்கப்பட்டுள்ள சஞ்சய்ஜோஷிக்கு அவரது ஆதரவாளர்கள் டில்லியில் இனிப்பு வழங்கினார்கள்.



இன்று பா.ஜ. தலைவர்கள் அத்வானி, ராஜ்நாத்சிங் ஆகியோர் ரத யாத்திரையை தொடக்குகின்றனர். யாத்திரையில் இடம்பெறும் பாடல்கள் அடங்கிய புதிய ஒலி நாடா வெளியீட்டு விழா டில்லியில் நடந்தது.

## இந்திய வலம்

### லோக்சபா மே 10 இல் கூடுகிறது

(புதுடில்லி)

ஆதாயம் தரும் பதவி விவகாரம் காரணமாக திடீரென ஒத்திவைக்கப்பட்ட பார்லிமென்ட் கூட்டத் தொடர் அடுத்த மாதம் 10ஆம் திகதி மீண்டும் கூட்டப்படுகிறது.

இதற்கான அறிவிப்பை லோக்சபா செயலகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

லோக்சபா மே 10ஆம் திகதி கூடி மே 23ஆம் திகதி வரை நடக்கும்.

ஆதாயம் தரும் பதவி சட்டதிருத்த மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்கள் இந்தக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படலாம். (கு)

# புதுச்சேரியில் இழுத்துக்கோ... பறிச்சுக்கோ... 'டமால்' ஆகிறது காங்., தி.மு.க. கூட்டணி

(புதுடில்லி)

எந்த ஒரு காரணத்திற்காகவும் தொகுதி பங்கீட்டில் தி.மு.க.வுக்கு இம்மியளவுகூட விட்டுத்தர மாட்டோம் என்று காங்கிரஸ் உடும்புப் பிடியாக உள்ளதால் புதுச்சேரியில் காங்கிரஸ் - தி.மு.க.கூட்டணி உடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுச்சேரி கூட்டணியில் காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் ஹரிபிரசாத், தி.மு.க தலைமையுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தி முடித்துவிட்ட போதிலும் தொகுதி உடன்பாடு முடிவாகவில்லை.

புதுச்சேரியில் ஆளும் கட்சியாகவும், கூட்டணியில் பிரதான கட்சியாகவும் இருப்பதால், ஆரம்பம் முதலே அங்கு காங்கிரசின் கையே ஓங்கி இருந்து வருகிறது.

தொகுதிப் பங்கீடு குறித்து தி.மு.க சார்பில் மத்திய அமைச்சர் தயாநிதிமாறனும் காங்கிரஸ் தரப்பில் முதல்வர் ரங்கசாமி, நாராயணசாமி, சண்முகம், வைத்தியலிங்கம் ஆகியோரும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

ஆரம்பத்தில் மொத்தமுள்ள 30 தொகுதிகளில் 20 தொகுதிகளைத் தாங்கள் வைத்துக்கொண்டு, 10 தொகுதிகளை தி.மு.க உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் எப்படி வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளட்டும் என காங்கிரஸ் கூறியது.

ஆனால் ஆற்காடு வீரச்சாமி உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் ஹரிபிரசாத்துடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தையும் பலனில்லாத நிலையில், சோனியாவிடம் தி.மு.க முறையிட்டது.

அதன்படி கடந்த திங்கட்கிழமை புதுச்சேரி காங்கிரஸ் தலைவர்களைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சோனியா ஆலோசனை நடத்தினார்.

அப்போது யதார்த்த நிலைமையை சோனியாவிடம் இந்தத் தலைவர்கள் விளக்கியுள்ளனர். ஆனால் பேச்சுவார்த்தையின் முடிவில் எந்த ஒரு இறுதி முடிவும் எட்டப்படவில்லை.

தொடர்ந்து நீடித்து வரும் இழுபறி குறித்து தி.மு.கவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் காங்கிரஸ் வட்டாரங்கள் டில்லியில் கூறியதாவது.

18 தொகுதிகள் வரை இறங்கி வர காங்கிரஸ் தயார். மீதமுள்ள 12 தொகுதிகளை அவர்கள் பகிர்ந்து கொள்ளட்டும். ஆனால் காங்கிரஸ் 15 தொகுதிகள் வைத்துக் கொண்டு மீதி 15ஐ கூட்டணி கட்சிகளுக்குத் தர வேண்டுமென தி.மு.க வலியுறுத்துகிறது.

அதை ஏற்க முடியாது. தமிழகத்தில் தனித்து ஆட்சியமைக்க் வேண்டுமென்பதால், பெரும்பான்மை இடங்களில் தாங்கள் போட்டியிட்டாக வேண்டிய அவசியம் உள்ளது என்று கூறி, அதனாலேயே வெற்றி வாய்ப்பு உள்ள தொகுதிகளாகப் பார்த்துப் பார்த்து தாங்களே வைத்துக்கொண்டு தி.மு.க போட்டியிடுகிறது.

பெரும்பான்மை பெறவேண்டுமென்று தானே 129 தொகுதிகளில் தி.மு.க போட்டியிடுகிறது? புதுச்சேரியில் நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது நாங்கள் மட்டும் இங்கு விட்டுத்தர முடியுமா? தமிழகமும் புதுச்சேரியும் வேறு வேறு மாநிலங்கள். இரண்டையும் போட்டுக் குழப்பக்கூடாது. கடந்த லோக்சபா தேர்தலின் போதே நாங்கள் ஏமாந்துவிட்டோம். தொடர்ந்து வெற்றி பெற்று வந்த பாரம்பரிய மிக்க லோக்சபா தொகுதியை தாரை வார்த்தோம். அதுபோல இப்போதும் நாங்கள் ஏமாறமாட்டோம். பா.ம.க அவர்களுக்கு முக்கியமாக தோன்றினால், அவர்களுக்குள்ளேயே கூட்டணி வைத்துக்கொள்ளட்டும். விடுதலைச்சிறுத்தைகள் விஷயத்தில் கருணாநிதி கூறியது போல. கூட்டணிக்குள் உள் கூட்டணியை பா.ம.கவுடன் வைத்துக்கொள்ளட்டும்.

இதுதவிர ஓரிரு தொகுதிகள் குறைத்தால் கூட எங்களது வெற்றிவாய்ப்பு வேட்பாளர்கள் கட்சியை விட்டு வெளியேறி மாற்றுக் கட்சிக்கு செல்லும் அபாயமும் உள்ளது.

இது தவிர தமிழக காங்கிரஸில் வன்னியர் பிரச்சினை கிளம்பிய சூழ்நிலையில், காங்கிரஸை வளர்த்த வடமாவட்டங்களில் கணிசமான தொகுதிகளை எங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால் நடந்தது என்ன? நாங்கள் கேட்ட ஒரு சில முக்கிய தொகுதிகள் கூட தராமல் கடைசிவரை பிடிவாதமாக பா.ம.க இருந்துவிட்டது. பெரும்பாலான வடமாவட்ட தொகுதிகளில் தி.மு.க.வும், பா.ம.கவும் மட்டுமே வைத்துக்கொண்டன. உண்மை இவ்வாறு இருக்கத் தற்போது புதுச்சேரி விஷயத்தில் மட்டும் நாங்கள் ஏன் விட்டுத் தரவேண்டுமென எதிர்பார்க்கிறார்கள் என்று புரியவில்லை. அவர்களுக்கு ஒரு நீதி, எங்களுக்கு ஒரு நீதியா? மேலும் தற்போது தேர்தல் நடைபெறும் ஐந்து மாநிலங்களில், காங்கிரஸுக்கு சாதகமாக உள்ள ஒரே மாநிலம் புதுச்சேரிதான்.

இங்கும் நாங்கள் விட்டுக் கொடுத்தால் கடைசியில் அதோ கதிதான் குறைந்த இடங்களில் போட்டியிட்டு தனிப்பொரும்பான்மை பெறமுடியாமல் போய், கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு ஆட்சியமைக்க முடியாது.

கர்நாடகாவில் தரம்சிங் கூட்டணி ஆட்சிக்கு நடந்ததுபோல இங்கும் எதிர்காலத்தில் நடக்கும் அபாயம் உள்ளது.

எனவே நாங்கள் விட்டுத்தரும் பேச்சுக்கே இடம்இல்லை. தமிழகத்திற்கு ஒரு கூட்டணி புதுச்சேரிக்கு ஒரு கூட்டணி என்று கூட இருக்கட்டும்.

முந்தைய தேர்தல்களில் இது போன்ற முன்னுதாரணங்களும் உள்ளதால் நாங்கள் எதற்கும் தயாராகவே இருக்கிறோம். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (கு)



திருவாரூர் அருகே கோவிந்தங்குடியில் முதல்வர் ஜெயலலிதாவைக் காணக் காத்திருக்கும் இஸ்லாமிய பெண்கள்.

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை ௯



### தங்கச்சுரங்கத்தில்

விட்வாட்டர்ஸ்ராண்ட் என்ற இடத்தில் தங்கம் கிடைப்பது 1886இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சுரங்கத்தையொட்டி பின்னர் எழுந்தது ஜோகன்ஸ்பர்க் நகரம். இங்குதான் மிகப் பெரும் கிரௌன் தங்கச் சுரங்கம் இருந்தது. இதை நோக்கித் தான் இருவரும் சென்றனர்.

படிக்கிற காலத்தில் எல்லாம் எந்த வேலைக்குப் போனாலும் சுரங்கத்தில் வெள்ளையர்களுக்காக மண்வெட்ட, சுமக்கப் போகாதே என ரீஜண்ட் சொல்வது வழக்கம்... இப்பொழுது அங்கு வேலை தேடி இருவரும் போய்க் கொண்டிருந்தனர். அதே ரீஜண்ட் தன் மகன் ஜஸ்டிசுக்கு சுரங்கத்தில் ஒரு எழுத்தர் வேலை கேட்டு பிலிசோ என்ற சுரங்கக் கண்காணிப்பாளருக்கு சில மாதங்களுக்கு முன்னர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதை நம்பித்தான் அங்கே போனார்கள். ரீஜண்டின் மகன் என்பதால் பிலிசோ மரியாதையுடன் வரவேற்றார். அவரைப் பற்றி விசாரித்தார் ஜஸ்டிஸ். தனக்கும் உடன் வந்துள்ள சகோதரனுக்கும் வேலை வேண்டும் எனக் கேட்டார். உன் தந்தை உன்னைப்பற்றி மட்டும் தானே எழுதியிருந் தார். இரண்டாவது நபர் பற்றி எழுதவில்லையே என்றார். அவர் பற்றியும் தபாலில் கடிதம் எழுதிப் போட்டு இருக்கிறார். வந்துசேரும் என்று ஒரு பொய்யை ஜஸ்டிஸ் சொல்லிவிட்டார்.

ஜஸ்டிசுக்கு எழுத்தர் வேலையும் மண்டேலாவுக்கு காவலாளி வேலையும் தரப்பட்டது. காவலாளிக்கு உரிய காக்கிச் சட்டை, விசில், டார்ச் விளக்கு, தடி, குல்லா எல்லாம் தரப்பட்டது. தங்கு வதற் ஒரு தகரக்கொட்டடியும் காட்டப்பட்டது. மரியாதைக்காக ஒரு நாளைக்குத் தன்னோடு ூங்க பிலிசோ அழைத்துக்கொண்டு போனார்.

அந்தப் பகுதியில் தங்கம் வெட்டி எடுக்கப்பட்டது. முதலாளிகள் கோடி கோடியாய்க் குவித்தனர். ஆனால் வெட்டி எடுத்த கூலிகள் தகரக் கொட்டடிகளில் விசிறியோ மின் விளக்கோ தண்ணீருக்கான குழாயோ இல்லாமல்தான் வாழ்ந்து வந்தனர்.

சுரங்கத்தின் மேல்பரப்பில் வரிசை வரிசையாகக் கட்டப்படிருந்த தகரக் கொட்டடிகளில் உடல் முழுதும் தூசி படிந்து கண் மங்கி கூன் விழுந்து வாடி வதங்கிய மனிதர்கள் சென்று வந்து கொண்டிருந்தனர். மாபெரும் இயந்திரங்களின் இரைச்சல்... மண் குவியல்களுடன் தங்கச் சுரங்கம் ஒரு வேடிக்கையான காட்சியைக் காட்டியது.

ஆப்பிரிக்க முதலாளித்துவத்தின் முழு சுயரூபத்தை முதல் முறையாக நெல்சன் மண்டேலா நேரில் தரிசித்தார். ஒரு புதிய உலகம் தெரிந்தது.

நிர்வாகியாக இருந்த பிலிசோ ரீஜண்டுக்கு தனிமரியாதை கொடுத்து வாடிக்கையான செயல் தான். எல்லா இனக் குழுத் தலைவர்களின் சிபாரிசுக்கும் சுரங்கத்தில் மரியாதையுண்டு. வேலையும் கிடைக்கும். ஏனெனில் சுரங்கத்திற்குத் தேவைப்படும் தொழிலாளர்களைத் தங்கள் பகுதிகளில் இருந்து இனக் குழுத் தலைவர்கள் தான் அனுப்பி வந்தனர். இனக்குழுத்தலைவர் தொழிலாளர்களிடம் அடங்கி ஒடுங்கி இருக்கவேண்டும் என்றும் கொடுக்கும் கூலியை வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லி அனுப்புவார். அந்தத் தொழிலாளி எதையும் மீறுவான். தலைவர் இட்ட கட்டளையைத் தவிர. எனவே தான் இனத் தலைவர்களுக்கு மரியாதை காட்டப்பட்டது.

சுரங்க மேற்பரப்பில் தொழிலாளர்களுக்கான தகரக் கொட்டடிகளும் இனக் குழுப் பிரிவுப்படி பிரித் துப் பிரித்து தனித்தனியே கட்டப்பட்டு இருந்தன. இவர்களை ஒன்றுபட விடாமலும் தடுத்தனர். வேண் டும் போது கலவரத்தையும் செயற்கையாக மூட்டியும் விட்டனர்.

பல்கலைக்கழகத்தில் பயில முடியாத இந்த உண்மைப் பாடத்தை நேரில் படித்தார் மண்டேலா. ஆனால் இந்த சுகவாசமும் நெடுநாள் நீடிக்கவில்லை. டிரான்ஸ் கீயிலிருந்து வந்து அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்த ஓர் இளைஞனிடம் தாங்கள் ஓடிவந்து விட்ட கதையை இளமைத் துடிப்புக் காரணமாகச் சொல்லி விட்டு அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று எச்சரித்து வைத்தார்.



1958 இல் வின்னியுடன் திருமணத்தின் போது

எந்தவொரு ரகசியத்தையும் மனைவியிடம் கூறிவிட்டால் கூட அந்த நொடி முதல் அது ரகசியம் அல்ல. இதனால் தான் கிரேக்க நாட்டில் ஒரு பழமொழி இருந்தது. அதாவது நீ அடுத்தவனிடம் கூறிவிட்டு இதை வெளியில் சொல்லாதே என்பதை விட நீயே வெளியிடுவது மேல் என்பதாகும். விளைவு என்ன? அதை அவன் பிலிசோவிடம் கூறிவிட்டான். பிலி சோ ரீஜண்டுடன் பேசிவிட்டார்.

அவர்கள் இருவரையும் வேலையைவிட்டு நீக்கி ஊருக்கு உடனே அனுப்பும் படி ஒரு தந்தியை அனுப்பிவிட்டார். மறுநாள் பிலிசோ தந்தியைக் காட்டி நீங்கள் புறப்படத் தயாராகுங்கள் என்றார். தாங்கள் வயது வந்த இளைஞர்கள் ஆதலால் முடிவெடுக்க உரிமையுண்டு என வாதிட்டு வேறு இடம்செல்கிறோம் எனக் கூறிவிட்டு வெளியேறினர்.

சோசா இனத் தொழிலாளிகள் தங்கள் சமூக வழக்கப்படி காசுடன் வந்து ஜஸ்டிசின் காலில் போட்டு வணங்கிச் சென்றனர். வறுமையிலும் இன மரபைத் தவறாது கடைப்பிடித்தார்கள். ஜஸ்டிசிடம் பணம் குவிந்தது. அதில் ஒரு பகுதியை அள்ளி மண்டேலாவுக்குக் கொடுத்தார். சில நாட்கள் காசு கிலுகிலுக்க இருவரும் சுற்றித் திரிந்த னர்.

தென் ஜோகன்ஸ்பர்க்கில் ஒரு நண்பர் வீட்டில் தங்க ஏற்பாடு செய்வதாகக் கூறிவிட்டு ஜஸ்டிஸ் புறப் பட்டார். தங்களுடைய பெட்டிகளை மண்டேலாவை எடுத்துக் கொண்டு வந்துவிடுமாறு சொன்னார். பெட்டியைத் தூக்க ஒரு நண்பனையும் அழைத்துக்கொண்டு போனார். மண்டேலா பெட்டியைத் தூக்கிக் கொண்டு வாயிலருகே வந்த போது பெட்டியைச் சோதிக்க வேண்டு மென காவல் அதிகாரி சொன்னார். தங் கச் சுரங்கம் ஆயிற்றே! தூக்கி வந்த பையன் அவர் ரீஜண்டின் மகன். இவர் அவர் என்று சொல்லியும் அவன் கேட்கவில்லை. தொடக்கத்தில் ஒரு அடையாளத்துக்குத் தான் சட்டைகளைப் புரட்டிக் கொண் டிருந்தான். நண்பன் தொடர்ந்து சோதிப்பதைக் கண்டித்துப் பேசியதால் அவன் துருவித் துருவித் தேடத் தொடங்கிவிட்டான். சட்டைக்குள் மடித்து வைத் திருந்த கைத்துப்பாக்கி சிக்கியது. காவல் அதி காரி உன்னைக் கைதுசெய்து இருக்கிறேன் என அறிவித்ததோடு காவல் நிலையத்திற்கு நண்பனை இழுத்துக் கொண்டு நடந்தான். மண்டேலா பின் தொடர்ந்தார்.

காவல் நிலைய அதிகாரியிடம் மண்டேலா எதையும் மறைக்காமல் அது தன் துப்பாக்கிதான் என்றும் தந்தை தந்தது என்றும் தான் கிளார்க்பரி ஹாரே கீல்ட் டவுன் ஆகியவற்றில் படித்தவன் என்றும் ஜோகன்ஸ்பர்க் கொலை, கொள்ளை நடக்கிற இடம் எனக் கேள்விப்பட்டதால் பாதுகாப்பிற்காகக் கொண்டு வந்தேன் எனக் கூறியதை ஏற்ற காவல்துறை அதிகாரி நண்பனை முதலில் விடுவிப்பதாகச் சொன்னார். மண்டேலாவை சான்றிதழ் இன்றி துப்பாக்கி வைத்திருந்த குற்றத்திற்காக மறுநாள் நீதிமன்றத்திற்கு வரச் சொல்லி அனுப்பிவிட்டார். ஆச்சரியப்படத்தக்க வகையில் நீதிமன்றத்தில் சிறிய அபராதத்துடன் நீதிபதி அனுப்பிவிட்டார்.

(தொடரும்)

## தவக்கால சிந்தனை

### ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கின்றார்

உலகுக்காகவே அவர், அவருக்காகவே உலகு இது அற்புதமான உடன்படிக்கை! கடவுள் ஆபிரகாம் வழியாக இஸ்ரயேல் மக்களோடு விசுவாசத்தின் அடிப்படையில் செய்துகொண்ட உடன்படிக்கை இயேசுவில் முழு நிறைவைக் கண்டது. ஆபிரகாம் உடன்படிக்கையை ஏற்று விசுவாசத்தின் தந்தையானார். மக்களை மீட்கும் புதிய உடன்படிக்கைக்கு இயேசுவின் இரத்தம் தேவைப்பட்டது. "நீங்கள் என் தந்தையை அறியவில்லை நானோ அறிவேன்" என்று இயேசு கூறும்பொழுது இருவருக்கும் இடையே உள்ள உடன்படிக்கை மட்டுமல்ல நெருங்கிய உறவையும் பார்க்கிறோம். "என்னில் விசுவாசம் கொண்டு என் வார்த்தைகளைக் கடைப்பிடிப்பவன் என் தந்தையையும் காண்பான்" என்றார். நாமும் இறைவனின் பிள்ளைகள் என்ற பெருமை பாடி ஆடம்பர வாழ்வை நடத்துவதிலும் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வதிலும் மட்டுமே உண்மை சகோரத்துவத்தை உருவாக்க இயலாது, உன்னத தேவனின் ஓர் குல மக்களாக வாழ வழிவகுக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நாம் ஆபிரகாமின் வழி வந்தோர் என்பதை விட, இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட அவரது உடன் உழைப்பாளிகள் என்பதை உள்ளத்தில் கொண்டு, அவர் வழி நடந்து வாழ்வின் அர்த்தத்தை ஆழப்படுத்துவோம்.

காவலன்

## வீடுகள் கையளிப்பு

(பருத்தித்துறை)

ஜேர்மன் அக்றோ அக்சன் நிறுவன நிதியுதவியுடன் சேவாலங்கா மன்றத்தினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக் கென பருத்தித்துறையில் நிர்மாணிக்கப்பட்ட 10 நிரந்தர வீடுகளை கையளிக்கும் நிகழ்வு ரீ.தேவராஜன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வீடுகளை கையளித்தார்.

இவ்விழாவிலே ஜேர்மன் அக்றோ அக்சன் பொறியியலாளர் கியூசி ஹான்ஸ்தோமஸ், சேவாலங்கா மன்றப் பிராந்திய வெளிக்களப் பணிப்பாளர் ரி.த. தமிழகன், யாழ். பணிப்பாளர் வி. கேசவன், சுனாமிப் பணிமனை நிர்வாக அதிகாரி ஆர். சந்திரன், பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆர்.வரதீஸ்வரன், சேவாலங்கா மன்ற வடமராட்சி திட்ட முகாமையாளர் கே.உஜிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மீன்பிடிவலைகள், வெளியிணைப்பு இயந்தி ரங்கள், தையல் மிசின்கள், கோழி வளர்ப்பு சாதனங்கள் என்பனவும் கையளிக்கப்பட்டன.

சேவாலங்கா மன்றம் பருத்தித்துறையில் மேலும் 40 வீடுகளை நிர்மாணித்து வருகின் றது. (சு-52)

## சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)


தொட்டிலடி சங்கானையில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திருமதி நவரத்தினம் மாணிக்கம் (வயது- 76) என்பவரே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக் காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(சு-132,133)



அண்மையில் நடைபெற்ற யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியா சாலையின் உதயநிலா பவள மலர் வெளியீட்டு நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட கிளி/ சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை அதிபர் திருமதி ஆ.இராசரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.



யா/செங்குந்தா இந்துக்கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்டப் பிரிவின் அலுவலர் டாக்டர் பேரின்பநாதன் மற்றும் கல்லூரி அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம், ஆசிரியர்களான ஏச். எஸ்.சர்மா, திருமதி ரவீந்திரநாதன் ஆகியோர் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

(படம்: தி.ரவீந்திரநாதன்)

# தொழிலாளர் சட்டத்தை எதிர்த்து பிரான்ஸில் வேலை நிறுத்தம்

(பாரிஸ்)

பிரான்ஸ் அரசு கொண்டுவந்த தொழிலாளர் சட்டத்தை எதிர்த்து நேற்றுமுன்தினம் நாடு தழுவிய ஒருநாள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதில் போக்குவரத்து தொழிலாளர்கள் ஆசிரியர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் பல்வேறு நகர தெருக்களில் ஊர்வலமாக சென்றனர். வேலை நிறுத்தம் காரணமாக பாரிஸில் இருந்து புறப்படும் நீண்டதூர ரயில்களில் ஒரு சில மட்டுமே இயங்கின புறநகர் ரயில்கள் முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டன. பொதுத்துறை போக்குவரத்து முடங்கியது.




விமானங்கள் 30 நிமிடம் முதல் ஒன் றரை மணி நேரம்வரை தாமதமாக சென்றதாக சிவில் விமான போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர். பிரான்ஸ் நாட்டின் பல்வேறு நகரங் களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. கடந்த பத்து ஆண்டு களில் இல்லாத அளவுக்கு ஆயிரக்கணக்கானோர் அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். தலைநகர் பாரி சில் வன்முறை சம்பவங்கள் நடக்காமல் தடுக்க 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

பிரான்ஸ் பிரதமர் டொமினிக் டி வில்லபின் பரிந்துரைப்படி அந்நாட்டு அரசு தொழிலாளர் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டது. புதிய சட்டத்தின்படி ஒரு தொழிலாளி நான்கு ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துள்ள நிலையில் கூட அந்த தொழிலாளியை நிறுவனத்தின் உரிமையாளர் நோட்டீஸ் மற்றும் காரணங்கள் கூறாமல் வேலையை விட்டு நிறுத்த உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏராளமான இளைஞர்களுக்கு வேலை உத்தரவாதம் மறுக்கப்படுவதாக கூறி பிரான்ஸ் மாணவர்கள் கடந்த ஒரு மாத காலமாக போராடி வருகின்றனர்.

இந்நிலையில் தொழிலாளர் சட்டத்தை எதிர்த்து பிரான்ஸ் போக்குவரத்து தொழிலாளர்கள், ஆசிரியர்கள்நேற்றுமுன்தினம் ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் கடந்த வருடம் பதவியேற்ற பிரதமர் டொமினிக் டி வில்லபினின் செல்வாக்கு சரிந்துவிட்டதாக கருத்துக் கணிப்பு ஒன்று கூறியுள்ளது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும் அவரே காரணம் என்று மக்கள் தெரிவித்துள்ளனர். புதிய தொழிலாளர் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து பேச்சு நடத்த வருமாறு பிரான்ஸ் அதிபர் ஜாக்வெஸ்சிராக் விடுத்த அழைப்பை மாணவர் மற்றும் தொழிலாளர் அமைப்புகள் நிராகரித்து விட்டன. எனினும் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்று நம்புவதாக அதிபர் தெரிவித்துள்ளார். (த)

# குர்திஷ் மக்களை படுகொலை செய்ததாக சதாம் உசேன் மீது மேலுமொரு வழக்கு

ஆயிரக்கணக்கான குர்திஷ் இன மக்களை படுகொலை செய்ததாக ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் மீது மேலும் ஒரு வழக்கு விசாரணை கோட்டில் தொடங்கவுள்ளது.



ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் கடந்த 1982 ஆம்ஆண்டுஅதிபராக இருந்த போது துஜய்ல் என்ற இடத்தில் 148 ஷியா பிரிவு மக்களை சித்ரவதை செய்து படுகொலை செய்ததாக வழக்கு தொடரப்பட்டது இந்த வழக்கு குறித்த விசா ரணை ஈராக் கோர்டில் நடந்து வருகிறது. தற்போது சதாம் மீது மேலும் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது.


கடந்த 1988ஆம் ஆண்டு குர்திஷ் இன மக்கள் அதிகமாக வாழும் ஹலாபாஜ் என்ற இடத்தில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் ஆண்களை விஷவாயு செலுத்திப் படுகொலை செய்ததாக சதாம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு குறித்த விசாரணை விரைவில் கோர்ட்டில் துவங்கவுள்ளது.

இதுகுறித்து ஈராக் கோர்ட் செய்தித் தொடர்பாளர் ரய்த் ஜொய்கி கூறும்போது வழக்கு தொடர்பான புலனாய்வு முடிந்து விட்டது. தற்போது கிரிமினல் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது என்றார். அரசுதரப்பு வக்கீல் கூறும்போது வழக்கு விசாரணை கோர்ட்டில் அடுத்த மாதம் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது ஏற்கனவே உள்ள வழக்கோடு இந்த வழக்கும் சேர்ந்து நடக்கும் என தெரிகிறது என்றார்.

இந்த வழக்கில் சதாமின் உறவினரான கெமிக்கல் அலி என அழைக்கப்படும் அலி ஹசன் அல்-மஜித்தும் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. குர்திஷ் இன மக்கள் மீது விஷவாயு செலுத்தியதில் இவருக்கு முக்கிய பங்குள்ளது எனவிசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். (த)



அமெரிக்காவில் மார்மதுகே பகுதியில் அடித்த சூறாவளி நக்ரையே புரட்டி போட்டு விட்டது.



அமெரிக்காவில் டெலாவார் பகுதியில் சி- 5 கார்கோ என்ற விமானம் விபத்தில் சிக்கி நொறுங்கியது.

# கொச்சியில் ஈரான் கடற்படை கப்பல்கள் இந்தியா மீது அமெரிக்கா அதிருப்தி

(வாஷிங்டன்)

இந்திய துறைமுகத்துக்கு தூதரக ரீதியிலான அழைப்பின் பேரிலேயே ஈரான் கப்பல்கள் வந்தன என்ற இந்தியாவின் விளக்கத்தை அமெரிக்கா நம்ப மறுத்து விட்டது இந்தியாவுடனான அணு ஒப்பந்தத்துக்கு அமெரிக்க பாராளுமன்றத்தில் ஒப்புதல் கிடைப்பதில் சிக்கல் ஏற்படும் என்று மூத்த எம்.பி.ஒருவர் எச்சரித்துள்ளார்.

ஈரானைச் சேர்ந்த இரண்டு கடற்படை கப்பல்கள் அண்மையில் கொச்சி துறைமுகத்துக்கு வந்தன. அந்த கப்பல்கள் இராணுவப் பயிற்சி பெறுவதற்காக இந்தியா வந்ததாக அமெரிக்காவுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால் இதை மறுத்த இந்தியா தூதரக ரீதியிலான அழைப்பின் பேரிலேயே ஈரான் கப்பல்கள் இந்திய துறைமுகத்துக்கு வந்தன. இது வரையறுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி என்று தெரிவித்தது. இதை அமெரிக்க வெளியுறவுத்துறையும் ஏற்றுக்கொண்டது.

அமெரிக்க வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ஆடம் ஏர்லி இதுபற்றி கூறுகையில், ஈரானைச் சேர்ந்த இரண்டு கடற்படை கப்பல்கள் இந்திய துறைமுகத்துக்குச் சென்றதை நாங்கள் அறிகிறோம். இந்தியா சார்பாக ஈரான் கடற்படைக்கு இராணுவப் பயிற்சியோ அல்லது இதர உதவிகளோ அளிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு குறித்து கருத்து கூறமுடியாது. அது மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு. இந்தியாவைப் போலவே அமெரிக்காவின் நட்பு நாடுகள் சிலவற்றுக்கும் ஈரான் கடற்படை கப்பல்கள் சென்றுள்ளன என்றார்.

அமெரிக்க அரசு சார்பாக ஆடம் ஏர்லி கருத்துத் தெரிவித்து இரண்டு நாட்களே ஆனநிலையில் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த மூத்த எம்.பி.யும் அமெரிக்கா வின் சக்தி வாய்ந்த 'சர்வதேச உறவுகள் அவை கமிட்டி உறுப்பினருமான டாம் லாண்டஸ் மீண்டும் பிரச்சினையை எழுப்பியுள்ளார். அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரணிடம் இதுகுறித்து லாண்டஸ் பேசினார்.

அப்போது லாண்டஸ் ஈரான் கடற்படைக்கு இந்தியா பயிற்சி அளித்துள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டால் அணு ஒப்பந்தத்துக்கு அமெரிக்க பார்லிமென்டில் ஒப்புதல்கிடைப்பதில் சிக்கல் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார். (த)

WORLD NEWS
உலக தரிசனம்

# தீவிரவாதத் தடுப்புச் சட்டவிதிகளை கடுமையாக்க நேபாள அரசு உத்தரவு

(காட்மண்ட்)

நேபாளத்தில் ஏழு கட்சி கூட்டணி வேலை நிறுத்தம் அறிவித்துள்ள சூழ்நிலையில் தீவிரவாத தடுப்பு சட்ட விதிகளை நேபாள மன்னராட்சி கடுமையாக்கியுள்ளது. மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் தொடர்பு உடையவர்களும் தீவிரவாதிகளாக கருதப்படுவார்கள். இந்த சட்டத்துக்கு அரசியல் கட்சி கள் மட்டுமன்றி மாணவர்கள் மற்றும் ஆசி ரியர் கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரா தலைமையிலான மன்னராட்சி நடக்கிறது. அங்குமீண்டும் ஜனநாயக ஆட்சியை கொண்டுவர வலியுறுத்தி ஏழு அரசியல் கட்சிகளின் கூட்டணி போராடி வருகின்றது. இதற் காக நான்கு நாள் வேலை நிறுத்தத்தை இந்த கூட்டணி அறிவித்துள்ளது.

அதேபோல நேபாளத்தில் மன்னராட்சியை ஒழிக்கக் கோரி ஆயுத வழியில் போராட்டம் நடத்தும் மாவோயிஸ்ட்டுகளும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு அளித்துள்ளனர். இரண்டு அணிகளும் 12 அம்ச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இந்நிலையில் நேபாள நாட்டின் தீவிரவாத தடுப்புச் சட்டத்தை (தடோ) மன்னர் திருத்தி அமைத்துள்ளார். இதன்படி தீவிரவாதிகளுடன் தொடர்பு உடையவர்களும் தீவிரவாதிகளாக கருதப்படுவர். அவர்களுக்கு மூன்று ஆண்டு கடுங்காவல் சிறை அல்லது ரூ.50ஆயிரம் அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக வழங்கப்படும்.

மன்னராட்சியை எதிர்த்து வேலை நிறுத்தம் தொடங்கும் நிலையில் அமுல்படுத்தப்பட்டுள்ள தடோ சட்டத்திற்கு அரசியல் கட்சிகள் மட்டுமல்லாது மாணவர், ஆசிரியர் மத்தியிலும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தலை நகர் காட்மண்டுவில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 20 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதற்கிடையில் நேபாள சத்பாவனா கட்சி பொதுச் செயலர் ஹிருதயேஷ் திரிபாதி மத்திய குழு உறுப்பினர் குஷிலால் மண்டல் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த 12 தலைவர்களை நேபாள பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர். நேபாளத்தில் உள்ள மனித உரிமைகளுக்கான ஐ.நா.வை கமிஷன் பிரதிநிதியும் இந்த சட்டத்திருத்தம் குறித்து பரிசீலித்து வருவதாக தெரிவித்துள்ளார். (த)

பொருளாதார நோக்கங்கள் மட்டும்தான் சமுதாயத்தில் மனிதனின் நடத்தையை நிர்ணயிக்கும் என்று கருதிவிட முடியாது.
-ப்ராய்டு

வலம்புரி

## சீமான்களே சீமாட்டிகளே எங்கே உங்கள் கருணை?

யாழ்ப்பாணத்தில் இப்போது பரிதாபத்திற்குரிய ஒரு கலாசார முறைமை அமுலாகிவருகிறது.

இருதய அறுவை சிகிச்சை ,சிறு நீரக மாற்று சத்திர சிகிச்சை உள்ளிட்ட உடல் உறுப்பு மாற்று சிகிச்சைகளுக்காக யாழ்.நகரத்திலும் ஊர்களிலும் நிதி கோருவதே இந்த முறைமையாகும்.

இதில் வேதனைக்குரிய விடயம் என்னவெனில், இருதய சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டிய குழந்தையொன்றை பெற்றதாய் ஒருவர் தன்மடியில் வைத்துக்கொண்டு ஒட்டோவில் இருந்தவாறு தன் பிள்ளையின் உயிரைக்காப்பாறுமாறு கோருகிறார்.

தன் குழந்தையின் உயிரைக்காப்பாற்ற கொளுத்தும் வெயிலில் ஒட்டோவில் இருந்தவண்ணம் 'உயிர்ப்பிச்சை கேட்கிறேன் உதவுங்கள்' என்ற அந்த உருக்கமான கோரிக்கை எத்தனை பேரின் மனங்களை இளகவைத்தது என்பது அந்த இறைவனுக்குத்தான் தெரியும்.

ஆனால் கொடுத்து வாழ்ந்த தமிழர் பண்பாட்டில் கொழுகொம்பில்லாது தரையில் வீழ்ந்து கிடந்த முல்லைக்கு தன்தேரை கொழுகொம்பாக்கிய பாரிமன்னனின் பரம்பரையில் வந்தவர்கள் என்று வரலாறு பேசுகின்ற நாம் ,அந்த ஏழைத்தாயின் அழுகுரலை- பச்சிளம் குழந்தையின் பரிதவிப்பை பார்க்காமல் இருப்பது மனித நேயமாகாது.

இவ்வாறு ஒரு தாய் தன் பச்சிளம் குழந்தையை மடியில் வைத்தவாறு வழியெங்கும் அலைந்து நிதி தேடும் நிகழ்வு நம் இனத்தின் ஈகைக்கு பெரும் இழுக்காகும்.

இருதய மற்றும் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகளுக்கு உதவும் பணிகளை மேற்கொள்ளும் லயன்ஸ் கழகங்கள் றோட்றிக் கழகங்கள் இந்த குழந்தையின் விடயத்தில் கண்ணை இறுக மூடிக்கொண்டது ஏன்?

ஓ! சீமான்களே சீமாட்டிகளே நீங்களும் உயர் சமூகத்தைத்தானே உங்களுக்குள் கட்டியெழுப்புகிறீர்கள் உங்களுக்குள்ளும் பதவிகள், பட்டங்கள். வசதி படைத்தவர்கள் மீதுதான் உங்கள் கருணையும் திரும்பும் அல்லவா? ஆகையால் அந்தக்குழந்தைக்காக நீங்கள் நிதி சேகரிக்கமாட்டீர்கள்.

நீங்கள் அதைச்செய்திருந்தால் அந்தத்தாய் தன் குழந்தையை ஏந்திய வண்ணம் யாழ்ப்பாணத்து நகரிலே 'காப்பாற்றுங்கள் என் குழந்தையை' என்ற கோஷம் போடும் சோகம் அரங்கேறியிருக்க மாட்டாது.

# 2300ஆண்டுகள் பழமைவாய்ந்த தூயதமிழ் கல்வெட்டுகள் தமிழகத்தில் கண்டுபிடிப்பு

2300 ஆண்டுகள் பழமை வாய்ந்த தூய தமிழ் கல்வெட்டுக்கள் தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இவையே மிகவும் தொன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

தஞ்சைப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறையினரால் கடந்த மாதம் தேனி மாவட்டத் தின் ஆண்டிப்பட்டி பகுதிக்கு அண்மையாகவுள்ள புலிமான் கோம்பை என்ற ஊரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராட்சியில் இக்கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழரின் பொற்காலம் எனப் போற்றப்படும் சங்க காலத்திற்குரிய மூன்று கல்வெட்டுக்கள் இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட கல்வெட்டுக்கள் ஒவ்வொன்றும் அண்ணளவாக மூன்று அடி உயரமும் ஒன்றரை அடி அகலமும் கொண்டவையாக உள்ளன.

இவை ஈமச் சின்னங்களில் நாட்டப்பட்ட நடுகற்களாக இருக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட முதல் கல்வெட்டில் "கல் பேடுதீயன் அந்தவன் கூடல் ஊர் ஆகோள்" எனக் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு 'கூடல் என்ற ஊரில் நடைபெற்ற ஆகோள் பிணக்கில் உயிர் நீத்த பேடு தீயன் அந்தவன் என்பவனுக்கு எடுத்த கல்' என பொருள் கொள்ளலாம்.

இரண்டாவது கல்வெட்டில் இருவரிகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அக் கல்வெட்டின் முன்பகுதி உடைந்து காணப்படுவதால் அதில் எழுதப்பட்டுள்ளவற்றில் சில சொற்களே காணப்படுகின்றன. முதல்வரியில் 'அன் ஊர் அதன்' என்றும் இரண்டாவது வரியில் 'ன் அன் கல்' என்றும் எழுதப் பட்டுள்ளது.

மூன்றாவது கல்வெட்டில் 'வேள் ஊர் பதவன் அவ்வன்' என பொறிக்கப்பட்டுள்ளது. வேற்று ஊரைச் சேர்ந்த அவ்வன் என்பவனுக்காக எடுக்கப்பட்ட கல் என இது பொருள்படுகிறது.

இக்கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்கள் முற்று முழுதாக தூய தமிழ் எழுத்துக்களாகும். இதில் எழுதப்பட்டுள்ள சொற்கள் சங்க கால இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் பிராமி வரிவடிவ ஆய்வில் புலமை பெற்ற ஐராவதம் மகாதேவன் இந்த கல்வெட்டுக்களைப் பார்வையிட்டு அவை பற்றி கருத்துத் தெரிவிக்கையில், தமிழகத்தில் கிடைத்த தமிழ்ப்பிராமி கல்வெட்டுக்களில் பிராகிருத சொற்கள் கலந்து வரும். ஆனால் இக்கல்வெட்டு தூய தமிழ்ச்சொற்கள் கொண்டு எழுதப்பட்டுள்ளன. இவையே இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் பழமை வாய்ந்தவையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தஞ்சை பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் ஊடகர்களிடம் இது தொடர்பில் தெரிவிக்கையில், இத்தகைய வரலாற்று சிறப்பு மிக்க கண்டு பிடிப்புகளை கள ஆய்வு மூலமும் ஆகழாய்வு மூலமும் வெளிக்கொணர்ந்து சங்க கால வரலாற்றை அறிவியல் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்திருப்பது தமிழ் மொழிதான் மிகப்பழமையான மொழியென நிரூபிக்க ஆதாரமாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

இக்கல்வெட்டுக்கள் மீட்பின் மூலம் சங்க காலத்தமிழர்கள் பரவலாக எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இக்கல்வெட்டுக்கள் மீட்கப்பட்ட புலிமான்கோம்பையும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் பெருமளவான ஈமச் சின்னங்கள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# எனது ஆட்சியின் கீழ் ஊழல், மோசடிகளுக்கு இடமளிக்கமாட்டேன்- வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

கொழும்பு நகரசேரிப் புற மக்களுக்கு 75 ஆயிரம் நிரந்தர வீடுகள் தேவைப்படுகிறது. அதனை நிவர்த்தி செய்ய இது வரை காலமும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இது தொடர்பாக மிகுந்த அவதானம் செலுத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மஹிந்த சிந்தனையூடாக 65 ஆயிரம் வீடுகளை அமைக்க முன்வந்தமை பாராட்டப்பட வேண்டிய விடயம்.

நான் மேஜரானதும் கொழும்பு நகர சபையையும் இணைத்து செயற்பட முயற்சிஎடுப்பேன். இவ்வாறு உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகர சபை முதல்வர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் வேட் பாளரான வாசுதேவநாணயக்கார கூறினார்.

கொழும்பு பொரல்லை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிளையின் ஏற்பாட்டில் வனாத்தமுல்லை பகுதியில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், உள்ளூராட்சி சபைகள் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் நல்ல பலன்களை அரசாங்கத்தின் கொள்கைகளை பின்பற்றி செயல்படும் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் இதனை அடையலாம்.

கொழும்பு நகரின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான குப்பை அகற்றும் பணிகளை துரிதப்படுத்தும் நான் முதல்வர் பதவிக்கு வந்ததும் முன்னுரிமை வழங்குவேன் .சுமார் 50 வருடங்களுக்கு மேலாக கொழும்பு நகரை ஆட்சி புரியும் ஐக் கிய தேசியக்கட்சியினால் நகரின் முன்னேற்றம் மிகவும் பாதிப் படைந்து பின்நோக்கிச்சென்றுள்ளது.

அர்ப்பணிப்புடன் செயல்படுவதன் மூலம் மக்களுக்கு சேவை செய்ய முடியும். பண வசதி இருந்தால் மட்டும் போதாது. அதனை சிறந்த முறையில் செயற்படுத்த நவீன செயல் திட்டங்களை வகுக்க வேண்டும்.

இதுபோன்று பண மோசடிகள் மற்றும் வீண் செலவீனங்களையும் தவிர்க்கவேண்டும். ஒரு வாரத்தில் இதனை செய்து முடிப்பேன் என்று என்னால் கூறமுடியாது.

கூடிய விரைவில் அதனை நிவர்த்தி செய்வதற்கான புதிய திட்டங்களை ஏற்படுத்துவேன். மஹிந்த சிந்தனையின் பலன்களை கொழும்பு நகர மக்களுக்கு பெற்றுத்தர எமது கரங்களைப் பலப்படுத்துங்கள் .

இதேவேளை, எனது ஆட்சியின் கீழ் ஊழல் மற்றும் மோசடிகளுக்கு இடமளிக்கமாட்டேன் என்றார். (கு-7)

## கணித பாடத்தில் நல்ல பெறுபேறைப் பெற விசேட திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாண பாடசாலைகளிலிருந்து க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடைய விசேட திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார் .

மத்திய கல்வியமைச்சின் உதவியுடன் வடக்கு -கிழக்கு மாகாணத்தின் 24 கல்வி வலயங்களிலும் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஏனைய பாடங்களில மாணவர்கள் இலகுவாக சித்தியடைகின்ற போதிலும் கணித பாடத்தில் சித்தியடைய தவறுவதால் உயர்கல்விக்கான வாய்ப்பை இழப்பதுடன் வேலை வாய்ப்புக்கான அடிப்படைத் தகமைகளையும் இழக்கின்றனர்.

இந்த நிலைமையினை மாற்றி யமைக்கும் நோக்கத்துடன் மாணவர்கள் கணித பாடத்தில் அதிகளவு சித்தியடையச் செய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு தரம் 10 ஆம் வகுப்பு 3 ஆம் தவணைப் பரீட்சையில் கணிதபாடத்தில் குறைந்தளவு புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விசேட வகுப்புக்களை நடத்துவதன் மூலம் சாதாரண தரப் பரீட்சையில் அவர்களை சித்தியடையச் செய்யலாம் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார் .(கு-9)


சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத
ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்



ஆறாம் திருவிழா


இராகம்-சரஸ்வதி தாளம் -ஆதி

பல்லவி
ஆதாரம் உனது நாமமே
ஆனந்தரூபனே மணிகண்ட தெய்வமே எமக்கு
-ஆதாரம்

அனுபல்லவி
பாதாரவிந்தமே துணையெனவே உன்னைப்
பாடுகின்றேன் எங்கள் வினைதீரவே எமக்கு- ஆதாரம்

சரணம்
வில்லுக்கு முதல்வன் நீ வேண்டுவார் வேண்டுவதை
விரும்பியே அருள்பவன் நீ சிந்தனை செய்பவர் தம்
புத்தியில் இருப்பவன் நீ புகழார் கலசெய்டிய
வித்தையிலே இருக்கும் வீரமணிகண்டனே -ஆதாரம்

ஆக்கம்-ஐயப்ப அடியவர்

## சாயி அருள் அமுதம்

நான் அன்பின் உறைவிடம். அன்பே எனது கருவி. அனபு இல்லாத பிராணி எதுவும் இல்லை. மிகவும் கீழ் நிலையிலுள்ளவை தம்மைத் தாமேயாவது நேசிக்கின்றன. தானே தனக்குக் கடவுளாக அதற்கு அமைகிறது. மலேரியா நோயாளிகள் இனிப்பை வெறுப்பது போலவும நீரிழிவு நோயாளிகள் இனிப்பை மறுப்பது போலவும் சிலர் இறைவனை வெறுத்தாலும் அல்லது மறுத்தாலும் உண்மையில் நாத்திகர் என ஒருவரும் இல்லை. நாத்திகர் எனத் தம்மைக் கூறிக்கொள்வோர் தமது நோய் அகன்ற பின் என்றோ ஒரு நாள் இறைவனைச் சுவைத்து அவரை ஆராதிப்பார்கள்.

நாளாந்த நற்சிந்தனை

# புலிகள் தனிநாட்டை பிரகடனம் செய்தால் அதனை முதலில் ஆதரிக்கும் நாடு நோர்வேயே

## விமல்வீரவன்ச முழக்கம்

(கொழும்பு)

நோர்வே அரசாங்கம் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான செயற்பாடுகளையே முன்னெடுத்து வருவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய இயக்கத்தின் உறுப்பினர் விமல் வீரவன்ச, தமிழீழ விடுதலைப்புலிகள் தனிநாட்டுப் பிரகடனத்தை மேற்கொண்டால் அதனை ஆதரிக்கும் முதலாவது நாடு நோர்வேயாகவே இருக்குமெனக்குறிப்பிட்டார்.

நாட்டின் அமைதி முயற்சிகளில் நோர்வேயின் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ள ஜோன் ஹான்சன் பௌயர் சூடானை இரண்டாகப் பிரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்.

பலஸ்தீனியத்தை இரண்டாக பிரிப்பதிலும் அவர் பங்காற்றினார். அதேவேளை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வில் கலந்து கொண்ட கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் விடுதலைப்புலி உறுப்பினர்களை சுதந்திரப் போராட்ட வீரர்கள் என குறிப்பிட்டுள்ளார். இது நோர்வேயின் புலி ஆதரவிற்கு தக்க சான்றல்லவா?

சமாதான நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் மாறியுள்ள போதிலும் நோர்வேயின் புலி ஆதரவு நிலைப்பாடுகளில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை, ஏற்படப்போவதும் இல்லை என விமல்வீரவன்ச குறிப்பிட்டார்.

(ந-4)




## க.பொ.த.உயர் தரப்பரீட்சை நேர அட்டவணை வெளியாகியது

(கொழும்பு)

2006ஆம் ஆண்டு கல்விப்பொதுத் தராதர உயர் தரப்பரீட்சையின் நேர அட்டவணை பரீட்சைத்திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய மே மாதம் 22ஆம் திகதி பரீட்சைகள் ஆரம்பமாகி யூன் மாதம் 15ஆம் திகதி முடிவடையும்.

மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விஞ்ஞானப் பாடங்கள் இறுதியாக நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணி பரீட்சை நிறைவடைந்து பத்து தினங்களில் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## இன்றைய சுகவீன லீவுப்போராட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கம் பங்கேற்காது

இலங்கை ஆசிரியர் சேவை தொழிற் சங்கத்தினர் இன்று நடத்தவுள்ள சுகவீன லீவுப்போராட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கம் பங்குபற்ற மாட்டாது என அதன் பொதுச்செயலாளர் மகாசிவம் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் பணி உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சேவை தொழிற்சங்கத்தினர் இன்று சுகவீன லீவுப்போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

எனினும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொடர் ஹர்த்தால் மற்றும் மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டங்களினால் முதலாம் தவணையில் பாடசாலை நாட்கள் குறைவாக இருப்பதாலும் தற்போது முதலாம் தவணைப்பரீட்சை நடைபெற்று வருவதனாலும் இப் போராட்டத்தில் கலந்து கொள்ள வில்லை என மகாசிவம் மேலும் தெரிவித்தார். (ந-5)

## நிரந்தர சமாதானம் வேண்டி திருமலையில் பெண்கள் பேரணி

(திருகோணமலை)

நாட்டில் நிரந்தர சமாதானமும் அமைதியும் உருவாக்கப்படவேண்டும் எனவும் ஜெனீவாப்பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க வேண்டுமெனவும் கோரி திருகோணமலை மாவட்டத்தின் தமிழ் ,முஸ்லிம்,சிங்கள சமூகங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் நேற்று திருகோணமலை நகரில் அமைதிப்பேரணி ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட பெண்கள் , சிறுவர் பராமரிப்பு நிறுவனம் இவ் அமைதிப் பேரணிக்கான அழைப்பினை விடுத்திருந்தது.

பேரணியின் இறுதியில் இவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கும் மகஜர் ஒன்றினையும் திருகோணமலை மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தனர்.

இம் மகஜரின் பிரதி மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் இவோ ஜோன்ஸனிடம் கையளிக்கப்பட்டது. (ந-4,9)

## படையினர் எமது...

ஸ்ரீலங்கா படைகள் தொடர்ந்தும் எமது சொத்துக்களைப் பயன் படுத்த முனைகிறது.

இதற்கு இராணுவ மேலாதிக்கத்தை பயன்படுத்துகிறது. இதில் நாம் அனைவரும் விழிப்பாக இருந்து எமது உரிமைகளை நிலைநாட்டுவோம். ஆக்கிரமிப்புப் படைகளின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு நாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

குறிப்பாக வருகின்ற புதுவருட நிகழ்வுகளுக்காக எமது எந்தவொரு சொத்தையும் (பாடசாலைகள்,விளையாட்டு மைதானங்கள்,பொது இடங்கள்) சிறிலங்கா ஆக்கிரமிப்புப்படைகளின் களியாட்ட நிகழ்வுகளுக்கு நாம் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம். இவ்வாறு அவ் வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-4)

## அறிக்கை கோருகிறது ம.உ.ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி யாழ். உயர்தொழிநுட்ப நிறுவனத்தின் மீதும் மாணவர்கள் மீதும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கையை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி றோகித பிரியதர்சன இந்த உத்தரவை விடுத்துள்ளார். (ந-133)

## மாணவனை...

ஏற்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் இது தொடர்பாக மாணவனின் பெற்றோர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி மாலினி ரணதுங்க குறித்த மாணவன் தனது கல்வியைத் தொடருவதற்காக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நட்டஈடாக பிரஸ்தாப ஆசிரியர் செலுத்த வேண்டுமென தீர்ப்பளித்தார். (ந-5)

## நல்லெண்ணத்தை வெளிப்படுத்த...

சந்திப்பாகத்தான் அமைந்தது. களநிலைமையில் ஏற்பட்டு வரும் நெருக்க டிகள் பற்றியும் விரிவாக சுட்டிக்காட்டியுள் ளோம்.

ஜெனீவாப் பேச்சுத்தொடர்பாகவும் ஜெனீவாப்பேச்சின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் பற்றியும் ஜெனீவாப் பேச்சின் பின்னரான கள நிலைமாற்றங்கள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் விளக்கியுள்ளோம்.

ஜெனீவா உடன்பாட்டை அரசாங்கம் மதித்து நடப்பதை உறுதி செய்வது அடுத்த கட்ட முயற்சிகளுக்கு மிக முக்கியமானது என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

*கேள்வி:-* அடுத்த கட்டப்பேச்சு நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

*பதில்:-* ஜெனீவாவில் இணக்கப்பாடு காணப்பட்ட பின்னர் தமிழர் தாயகப்பிரதேசத்தில் முன்பிருந்ததை விட ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயுதக்குழுக்கள் வெளிப்படையாகவே இராணுவத்தோடு சேர்ந்து பொதுமக்களை அச்சுறுத்துவதும் மக்கள் மீதான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதும் ,போராளிகள் மீது தாக்குதல்களை அதிகரித்திருப்பதும் குறித்து சந்திப்பில் எடுத்துக்கூறியுள்ளோம்.

*கேள்வி:-* பேச்சுக்கு இன்னும் இருவாரங்களே உள்ளன. இணக்கப்பாட்டினை அரசு நடைமுறைப்படுத்தும் என்று நினைகிறீர்களா?

*பதில் :-* தனது நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு அரசாங்கத்துக்கு இன்னும் சிறிது காலம் தான் இருக்கிறது. அதற்குள் அரசாங்கம் தனது நல்லெண்ணத்தைக் காட்டவேண்டும்.

*கேள்வி:-* தெற்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலால் ஏற்பட்ட சூழல்நிலை நடைமுறைக்குச் சாத்தியமானது எனக்கருதுகின்றீர்களா?

*பதில் :-* மிக வெளிப்படையாகவும் கடுமையாகவும் இனவாதம் பேசிய கட்சிகள் சிங்கள மக்களாலேயே தூக்கி எறியப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காரணங்கள் சொல்வதற்கு இனி ஒன்றும் இல்லை. தமிழர் பிரச்சினையில் தீர்க்கமான முடிபுகளை எடுத்து சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு முழுமையாகச் செயற்படவேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு. அதற்கான ஆணையே சிங்கள மக்கள்தேர்தலில் வழங்கியுள்ளனர் என நினைக்கிறேன்.

*கேள்வி:-* ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்காக கொழும்பில் ஏழு கட்சிகள் கூடியுள்ளன.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தலைமைதாங்கியுள்ளது. விமல் வீரவன்ச பிரதானமாக உரையாற்றியுள்ளார். கருணா குழுவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் அரசாங்கமே ஆயுதக்குழுவை அங்கீகரித்துள்ளதே இவை பற்றி?

*பதில் :-* அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறதோ இல்லையோ என்பதற்கு அப்பால் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒரு தெளிவான முடிபை வெளிப்படுத்தியுள்ளனர்.

தற்போது நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சிங்கள மக்கள் பச்சை இனவாதம் பேசிய கட்சிகளை தூக்கி எறிந்துள்ளார்கள்.

அதேபோன்று தமிழ்மக்கள் தங்களுடைய இலட்சியம், உறுதிப்பாடு தொடர்பாக தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு சாட்டை அடி கொடுத்திருக்கிறார்கள். தெற்கில் உள்ள சிங்கள மக்கள் கூட சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகளை தூக்கி எறிந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் ஜனாதிபதி தன்னுடைய நிலைப்பாட்டை தெளிவாக்கிக்கொள்ளவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார் என்றே நான் நினைக்கிறேன். மகிந்த ராஜபக்ஷ ஒரு தெளிவான முடிபை எடுத்துக் கொண்டு தமிழ் மக்களுடை பிரச்சினைகளை நன்குணர்ந்து தனது செயற்பாட்டில் மாற்றங்களைக்காட்டுவது அவசியமானதாகும்.

*கேள்வி:-* சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏதாவது செய்திகள் அனுப்பியுள்ளீர்களா?

*பதில்:-* சிறிலங்கா அரசாங்கத்திற்கு பல செய்திகளை அனுப்பியுள்ளோம். ஜெனீவாவில் இணக்கப்பாடு காணப்பட்ட யுத்தநிறுத்த அமுலாக்கத்தை செயற்படுத்துவது தற்போது ஏற்பட்டிருக்கும் குழப்பமான சூழ்நிலைகள் தொடர்பாகவும் இவற்றை சீர்செய்வது தொடர்பாகவும் எமது மக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் அவசியம் தொடர்பாகவும் நோர்வேத் தரப்பிற்கு தெளிவுபடுத்தியுள்ளோம். இவற்றை அரசாங்கத்திற்கு நோர்வேத் தரப்பு தெளிவுபடுத்தும் என்றார் சு.ப.தமிழ்ச் செல்வன்.

(ந-4)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 06.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.